Registered No M. 878

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்,

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

தொகுதி 2. | 1911௵ ஜூன்௴ 15௳ விரோதிகிருது௵ ஆனி௴ 1௳ | பகுதி 2.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

# பொருளடக்கம்.

பக்கம்


மோனம் என்பது ஞானவரம்பு—ப. நா. ௪௧

மதங்களுக்குள் சகோதரதர்மம்நிகழவேண்டுமென்பது A.B.ப.நா. ௪௯

விபூதிதாரணமுறை—சி. நாராயணஸ்வாமி அய்யர் ௫௫

பரமானந்தோதயசாதனம்—கோ. வடிவேலுசெட்டியார் ௫௭

சங்கீதம்—பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் ௬௧

பிரஹ்மஞானசபையும் சகோதரபாவமும்—C. W. L. ப. நா. ௬௫

புத்தகவரவு—பத்திராதிபர் ௬௯

சமாசாரம் ஷை ௭௧

புதிய சர்வகலாசாலைகளை ஸ்தாபிக்கும் முறையில் பிரயத்தினங்கள் } ப. நாராயணன். ௭௩

பதஞ்சலிமஹரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம் }



## The
# Oriental Prognostic Observatory.

Corresponding Director: **V. V. Ramanan.**
F. Z. S. (Lond.) O.M.D.S.F.V. (Berlin).
M.O.S.M F. (Paris): etc.

Charges very moderate for the work turned out!

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. Alan-Leo writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, Sami Pillai St.,
Chulai, Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 2. | 1911ஞ ஜூன்மீ 15உ<br>விரோதிகிருதுஞ ஆனிமீ 1உ | பகுதி 2. |

## மோனம் என்பது ஞான வரம்பு.

இது நம் தென்னாட்டில் இற்றைக்கு 1500 வருஷங்களுக்கு முன்னர் இருந்த யோகினியாகிய புகழ்பெற்ற ஔவையாரின் வசனம். இதன்பொருள்:—மௌனமென்பது ஞானமென்ற பூமியில் மிதிப்பதற்கு வரம்பாம். மௌனம் என்றால் உரையாடாமல், வாய்மூடுதல் அன்று. ஆனால் யோகசாஸ்திரத்தில், பதஞ்சலிபகவான், சொல்லியிருக்கிற முறையாக, "சித்தவிர்த்தி நிரோதமே மௌனமாம்".

யோகஶ்சித்தவ்ருத்திநிரோத:॥

யோகமென்றால் சமாதிகூடல். சித்தவிர்த்திகள் அடங்கினால், யோகம் சித்திக்கும். அப்படி விர்த்திகள் அடங்கும்போது, யோகியானவன் தன் ஸ்வரூபத்தில் இருப்பான். பற்றற்ற கைவல்லிய நிலை அது. இதுதான் மௌனத்தின் எல்லை.

2. நிக்கிரகம் என்றால், இந்திரியங்கள், மனசு, முதலானவைகளை வேலைசெய்யாமல், அவை போய்த்துப்போகும்படி அடக்குவது என்பது அர்த்தமன்று. அவ்விதம் அடக்கினால், ஸுஷுப்திதான் உண்டாகும், ஜடத்தன்மை அமையும்.

அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவு அறிந்தேனே.—திருமூலர்.

இதனால் நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், மனப்பற்றுடன் இந்திரியங்கள் விஷயநுகர்ச்சியில் செல்லாமல், தடுக்கவேண்டுமென்பது ஏற்படுகிறது. விஷயங்களின் ஆசையைவிட்டும், இந்திரியாதிகளின் வசமாகாமலும், அவைகளை அதன் அதன் தொழிலைச்செய்யும்படியாகப் பழகுதல் வேண்டும்.

𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍।
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍 𑌸𑍍𑌪𑍃𑌶𑌞𑍍𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍 𑌅𑌶𑍍𑌨𑌨𑍍 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍 𑌸𑍍𑌵𑌪𑌨𑍍
𑌶𑍍𑌵𑌸𑌨𑍍॥

𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍𑌵𑌿𑌸𑍃𑌜𑌨𑍍 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌨𑍁𑌨𑍍𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌪𑌿।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍॥

—8, 9, பகவத்கீதை 5-ம் அத்தியாயம்.

இவைகளின்பொருள்:—மனம் ஒருநிலைப்பட்டு, மெய்யுணர்வு பெற்றவன், பார்ப்பவனாயினும், கேட்பவனாயினும், தொடுபவனாயினும், முகர்பவனாயினும், உண்பவனாயினும், நடப்பவனாயினும், உறங்குபவனாயினும், மூச்சுவிடுபவனாயினும், பேசுபவனாயினும், (மலஜலங்களை) விடுபவனாயினும், எடுப்பவனாயினும், கண்களை விழிப்பவனாயினும், மூடுபவனாயினும், "இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களுள் திரிகின்றன" எனத்தெரிந்து நான் ஒன்றும் செய்வதேஇல்லை எனக் கொள்ளவேண்டும்.

இப்படிச் செய்தல் கூடுமா? என்றுவினா ஏற்படும். மனத்திற்கு சரியான லக்ஷியத்தைக் கொடுத்தால், மனம் அதில் நிற்க, இவ்விதம் இந்திரியங்கள் நிகழ்தல் கூடும்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌧𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃।
𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌸 𑌪𑌾𑌪𑍇𑌨 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌮𑌿𑌵𑌾𑌂𑌭𑌸𑌾॥

—10, பகவத்கீதை 5-ம் அத்தியாயம்.

இதன்பொருள்:—எவன், பிரஹ்மத்தினிடத்தில் கர்மங்களை வைத்து, பற்றைவிட்டுச் செல்கின்றானோ அவன், நீரினால் தாமரையிலைபோல, பாபத்தால் ஒட்டப்படுவதில்லை.

இவ்வுபதேசப்படி, உயர்நலம் அமைந்த யாதேனும் ஒரு லக்ஷியத்தில் மனத்தை நிறுத்தி, உலகவிஷயத்தில் பற்றில்லாமல் நடைபெறலாம். அப்படியின்றி, இந்திரியங்கள் விஷயங்களை நோக்கிச் செல்லவும், மனம் இந்திரியங்களை நோக்கிச்செல்லவும், புத்தி மனத்தைநோக்கவும், ஆத்மா புத்திவழிச் செல்லும்படியாக நேரும்போது, சம்சாரத்திற்குள்ளாவான். வசப்படாத துஷ்டக்குதிரையை நம்பி, அதன் ஆதீனமாகி, திண்டாடுகிற சாரதியின் கதி சம்பவிக்கும். அப்படி மோசம்போகாமல், ஆத்மாவின் ஆஞ்ஞையைச் சாரதியான புத்தி தலைமேற்கொண்டு, மனமாகிற கடிவாளத்தைச் சரிபாகப் பிடித்து சத்விஷயங்களான நேர்பாதையில் இந்திரியங்களாகிற குதிரைகளை நடத்தினால், இந்திரியங்களை அடக்கலாம். இக்கருத்தை கடோபநிஷத்தில் 3-ம் அத்தியாயம் 3 முதல் 9 வரையுள்ள மந்திரங்களில் பார்த்துக்கொள்ளுக.

3. அப்படி செய்தால், அறிவோடு இருக்கலாம்.

"அஞ்சும் அடக்கி அறிவோடு இருந்தபின்,
துஞ்சுவதில்லை உடம்பு"—ஔவை குறள்.

அடக்குதல் என்றால் சுத்தமாய் அற்றுப்போகச்செய்தல் அன்று என்பதை சூசிப்பிக்கும்பொருட்டே, ஸ்ரீ கிருஷ்ணபகவான், காளீயமர்த்தந லீலையில், காளீயனைக் கொல்லாமல், தம்முடைய பக்த ஜனங்களின் க்ஷேமத்தின்பொருட்டு, யமுனா நதியினின்று மாத்திரம் அப்புறப்படுத்தி, அகண்டமாகிற சமுத்திரத்திற்குப் போகும்படியாகச் செய்துபோட்டார். காளீயன், விஷயாதிகள், இந்திரியாதிகள், ஆசாபாசங்கள் என்பவற்றைப் பிரதீகப்படுத்துகின்றான். சூரபத்மாசுரன் கொடிய பாவியாக இருந்து மனுஷ்யாள், தேவாள், முதலாயினோரை ஹிம்ஸித்துவந்தான். ஸ்வாமி ஸ்ரீ சுப்பிரமணியர் அவனுடன் பல விதமான போர்கள் செய்தார். அவன் நானாவிதமான ரூபங்களை எடுத்துக்கொண்டான். கடைசியில் மயில்ரூபத்தை

அடைந்து அவன் போர்செய்யத் தலைப்பட்டான். அப்போது ஸ்வாமி ஸ்ரீ சுப்பிரமணியர் அம்மயிலைத் தம் வாகனமாகச்செய்து கொண்டார்.

சூரபத்மாசுரன் என்றால் பஞ்ச இந்திரியங்களையும் மநம் முதலானவைகளையும் உலகவிஷயங்களில் அழுந்தச்செய்யும் ஆசாபாசமே. சூரனை சுப்பிரமணியர் கொல்லவில்லை. ஆனால் அவனைத் தாம் வாகனமாகச் செய்து அதன்மூலமாய் தாம் அவனை சுவாதீனப்படுத்திக் கொண்டார். சுப்பிரமணியரின் இந்த அவசரம் ஞானியானவன் உலகத்தில் நடைபெறவேண்டிய முறை இஃதென்று காட்டுகின்றது. சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் இருக்கின்றவாறுபோல, ஞானியும் உலகத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் இருத்தற்பாலன். இவ்விதமாக இந்திரியங்களையும் மநத்தையும் அவைகள் போகும் வழியில் விடாமலும், நாம் அவைகளின் வசமாகாமலும், நாம் நினைக்கும் வழியில் அவைகளைச் செல்லும்படி செய்தலும், அவைகளைச்சுவாதீனப்படுத்தலும் மௌநம் ஆகும். இதுவே நேர்வழியென்று குறிப்பித்துக்காட்டும்பொருட்டு, சக்திபஞ்சாக்ஷர மந்திரத்தை அனுஷ்டிக்கிற கிருகஸ்தர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தியாகசுலோக மூர்த்தியான ஸ்ரீ மஹாதேவரின் குடும்பத்தின் நிலைமையை ஆராய்ந்து அதன் உண்மையை அறிந்துகொள்ளவேண்டும்.

4. திரிமூர்த்திகளில் மஹாதேவரின் மகிமையும் கம்பீரமும் வாசாமகோசரமாக இருக்கிறது. "மாற்றமனங்கழியநின்ற மறையோன்" என்றும், "சொற்பதம்கடந்த தொல்லோன்" என்றும், "சித்தமும் செல்லா சேட்சியன்" என்றும், "உரைஉணர்விறந்த உணர்வதோர்உணர்வே"

என்றும், "அவர் கோயில் சுடுகாடு, புலித்தோல் நல்லாடை, பூசவதும் வெண்ணீறு, பூண்பதுவும் பொங்கு அரவம்" என்றும், பற்பலவாறு புகழப்பெறும் சிவபெருமானது சிரசிலோ கங்காதேவி, பக்கத்தில் பார்வதிதேவி, அத்தேவியர் வாஹனமோ சிங்கம், ஒரு குமாரன் கணபதியாகிய யானைமுகத்தோன், அவர் வாஹனமோ பெருச்சாளி, மற்றவர் ஷண்முகன், அவர் வாஹனமோ மயில், மஹாதேவரின் வாஹனமோ விருஷபம்.

இக்குடும்பத்தின் நேர்மையைச் சற்று விசாரிப்போம். பகையும் வைரமும் நிரம்பப்பொருந்திய குடும்பம் இது. உமையாகிய பார்வதிக்கும், கங்காதேவிக்கும் ஸஹகளத்ரத்தினால் பகை; கணபதி முகத்துக்கும், தேவிவாகனமான சிம்மத்திற்கும் பகை; மகாதேவர் வாகனமான விருஷபத்திற்கும், சிம்மத்திற்கும் பகை; மகாதேவருடைய ஆபரணங்களாகஅமைந்துள்ள சர்ப்பங்களுக்கும், கணபதியின் வாகனமான பெருச்சாளிக்கும் பகை; சர்ப்பங்களுக்கும், ஷண்முகன் வாஹனமான மயிலுக்கும் பகை. இத்தன்மையுள்ள இக்குடும்பத்தின் பதியான மஹாதேவர் எங்ஙனம் பரம யோகியாக இருக்கின்றார் என்பதை நாம் அறியவேண்டும். இவைகளால் விபரீதங்களான குழப்பங்களும் கொந்தளிப்புக்களும் உண்டாகக்கூடியனவாக இருந்தும், மநம் சிறிதேனும் சலியாமல் மகா யோகியான ஈசுவரன் தம் யோகசமாதியால் இவ்வுலகத்தை நடத்துகின்றார். யோகநிஷ்டை கூடவேண்டுமென்றால் கானகத்துச்சென்று கடுந்தவம்செய்யவேண்டியது அவசியமன்றென்றும், உலகத்தைவிட்டு ஓடவேண்டாமென்றும், குடும்பத்தைத் துறந்து காஷாயத்துறவி வேடம் பூணவேண்டாமென்றும், அவனவன் இருந்தஇடத்திலேயே வெளிவிஷயங்களைநாடிச்செல்லும்இந்திரியங்கள் மநம் முதலியவைகளை நிரோதம்செய்து, அந்தர்முகப்படுத்தி அதாவதுஉள்நோக்கலே "யோகமுறை" என்றும், தம் குடும்பஇயல்பினால் காட்டியிருக்கின்றார். விஷய அலைகள் பலவாறாக மனத்தின்கண் மோதினாலும், குடும்ப சச்சரவால் பலவாறான போராட்டங்கள் ஏற்பட்டாலும், அவைகளால் மனம் தளர்ந்து தடுமாறாமலும், ஒருநிலைப்பட்டவனாய்இரு என்ற கீதாசாஸ்திரத்தில் பகவான் கிருஷ்ணன் செய்த உபதேசமே இம்மகாதேவரின் குடும்பத்தில் பிரதிகப்படுத்தியிருக்கிறதன்றோ? அஹங்காரம் என்ற பெருச்சாளியும், டம்பம், செருக்கு, இறுமாப்பு என்ற மயிலும், பொறாமை, துராசை என்ற சீறும் சர்ப்பமும், குரோதமென்ற சிம்மமும், மோகம் என்ற காளையும் முறையே பிரஞ்ஞான சொரூபியாகிய கணபதியாலும், ஞானபண்டிதராகிய ஷண்முகராலும், இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தியாலும் ஐயிக்கப்படவே பரமேசுவரன் சமாதியை நிர்விக்நமாய் தங்கு தடையின்றி ஒரே நேர்மையாய் நடத்தி அறி

வுறுத்துகின்ருர். உலகத்தில் குடும்பத்தில் வாழ்பவரான நாம் நடக்கவேண்டிய முறையைத் தம்முடைய உதாரணமாக எடுத்துக் காட்டினர்போலும்.

"முகத்திற்கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற்கண்கொண்டு காண்பதே ஆனந்தம்".
"சாத்திரமோதும்சதுரர்களைவிட்டு நீர்
மாத்திரைப்போதுமறித்து உள்ளே நோக்குமின்".

என்ருர் திருமூலர்.

5. அதற்கு சாதகமாக முன் பிரஸ்தாபித்தபடி மநம் நிலை நிற்பதற்காக, சரியான லக்ஷியத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பகிர் முகமாக நடைபெறும் பாஹ்யப் பிரபஞ்சத்தின் விகாசப்படிகளின்கண்ணுள்ள ஜீவராசிகளைஆராய்ச்சி செய்துவருகையில் ஒவ்வொரு காரியத்தையும் காரணத்தில் லயப்படுத்திக்கொண்டு வருவோம். இதைஅத்துவாக்களைத் தாண்டுதல்என்பார். *இம்முறையில் முதற்காரணமான வஸ்து புருஷன் என்று ஏற்படும். அப் புருஷனே உலகத்திலுள்ள ஜீவராசிகளில் தங்கியிருக்கிறரென்ற உண்மை உணர்வு உண்டாகும். அப்புருஷனிடத்தில் எப்போதும் நிச்சயபுத்தியுள்ளவனுய் இருத்தலே சரியான லக்ஷியம் பெறுதலாம். 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்' பரம புருஷனை அறிதலாம். (ஸொऽஸ்ரூ நः வாமோவொது தி॥) மற்றது வேதாந்த முறை. அந்தர்முகமான அப்பியாச முறை ஸ்தூல சரீரம், இந்திரியங்கள், மநம், இவைகளுக்கு வேறய், அறிவுக்கு அறிவாய், தன் ஹிருதய குகையில் ஒடுங்கியிருக்கும் புருஷனை உணர்தல், இதுவே ஈசுவரன், பரமாத்மா என்று அறிதல். இதையே திருமூலர் அடியில் வருமாறு உபதேசிக்கின்ருர்.

பூவினில் கந்தம் பொருந்தியவாறுபோல்,
சீவனுக்குள்ளே சிவமணம்பூத்தது.
ஓவியம் போல் உணர்ந்து அறிவாளர்க்கு
நாவி அணைந்த நடு தரியாமே.

(ஓவியம்—சித்திரம், நாவி—புழுகுப்பூனை) ஆனால்அந்நிலையைச் சூந்நியம் என்று எண்ணமல் அதில் ஆத்மா உளனென எண்ணுக. ஆத்மா உளனு, இலனு என்ற சந்தேகங்கள்கொள்ளற்க.

---

*அத்துவாக்களாவன:—மந்திரம், பதம், அக்ஷரம், புவநம், தத்துவம், கலை.
"அத்துவா எல்லாம் அடங்கச் சோதித்தபடிச்
சித்துருவாய் நின்ருர்தெளிவது எந்நாளோ!" தாயுமானவர்.

அஸ்தீத்யேவோபலப்தஸ்ய தத்வபாவ: ப்ரஸீததி
கடோபநிஷத்.

இதன் பொருள்:—ஆத்மா உளன் என எவன் என்னுகிருனே அவனுக்குத்தான் ஆத்மா வெளிப்படுவான். மற்றவன் தர்க்க விசாரணையினல் இல்லையென்பான், அறியான். அவனுக்கு ஆத்மாவெளிப்படான். இதைப்பற்றிய பரம உத்கிருஷ்டமான உபதேசத்தை விஸ்தாரமாககடோபநிஷத்தின் 5-ம், 6-ம் வல்லிகளில்கண்டுகொள்க.

6. வஸ்துக்களைப் பூதக்கண்ணுடியால் ஆராய்வதில் ஏதேனும் சூக்ஷ்மமான விஷயத்தை முன் அறியாதவன் பார்க்கவேண்டுமானல், முன் ஆராய்ச்சியினுல் பார்த்துத் தெரிந்தவன் சொல்லும் வார்த்தையை நம்பி அது இவ்வடிவமாகவும், இக்கிறமாகவும், இருக்கிறது என்று சொன்னல், அதை நம்பி, அதன்மேல் புதிதாய்ப் பார்க்கிறவனுடைய ஆராய்ச்சி நிகழ்ந்தால், அவனுக்கு அச்சூக்ஷ்மமான விஷயம் புலப்படும். அப்படியின்றி தன்னுடைய பூர்வ அனுபவத்தினுல் அவ்வடிவும் அவ்வர்ணமும் இருக்கமுடியாதென்று வெறுமையான தர்க்கம்பேசி, நம்பிக்கையின்றி, சந்தேகங் கொண்டவனய், பூதக்கண்ணுடியின் மூலம் நண்ணிய வஸ்துவைப் பார்ப்பானகில் அவனுக்கு அது விஷயப்படாது. அம்மாதிரியே இந்த ஞான முறையின் ஆராய்ச்சியும் நிகழும். பெரியரான மஹரிஷிகள் தங்களுடைய அநுபவங்களை உபநிஷத் முதலான நூல்களில் தெரிவித்திருக்கிருர்கள். அம்முறையை நம்பி அவைகளை அனுஷ்டிப்போமாகில், கடோபநிஷத்தில் அடியில் வரும் மந்திரப்படி, ஜீவாத்மாவைத் தனித்து வேறுப்படுத்திக் கைவல்லிய நிலையில் அறியலாம். பின்பு அதுவே பரமாத்மாவென்றும் அறியலாம்.

அங்குஷ்டமாத்ர: புருஷோऽந்தராத்மா ஸதா ஜநாநாம்
ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட: ।
தம் ஸ்வாச்சரீராத் ப்ரவ்ருஹேந் முஞ்ஜாதிவேஷீகாம்
தைர்யேண தம் வித்யாச்சுக்ரமம்ருதம் தம் வித்யாச்சுக்ரம
ம்ருதமிதி ॥

இதன் பொருள்:—அங்குஷ்ட மாத்திரமாயுள்ள புருஷனை அந்தராத்மா எப்போதும் ஜனங்களின் ஹிருதய குகையில் இருக்

கின்றான். முஞ்சியி (ஓர்விதக் கோரைப் புல்லி)னின்று அதன் மத்தியில் உள்ள கோரைத் தண்டைப் பிடுங்கி வேறுபடுத்தல் போல பொறுமையுடன் பிரமாதமில்லாத ஞானத்தால் மெய்யுணர்வினால் யோகியானவன் தன் சரீரங்களினின்று அந்த அந்தராத்மாவை வேறுபடுத்தல்வேண்டும். இவ்விதம் வேறுபடுத்தலே கைவல்லிய நிலைபாம். எவ்விதப் பற்றுமின்றி தனித்திருத்தல் கைவல்லிய நிலையாம். இதுவே நிர்வாண பதமாம். இதுவே விர்த்திகளின் சலகம் ஒய்ந்த நிலை.

அந்த அந்தராத்மாவே சுத்தமான மரணமற்ற பரமாத்துமாவாக அறிதற்பாலது. உண்மையான மௌநத்தை முறைப்படி சாதிப்போமாகில் கைவல்லியம் பெறலாம். அதுவே ஆத்ம சாக்ஷாத்காரம் அடைதலாம்.

* பதமூன்றும் கடந்தவர்க்கு மேலான ஞானபதப் பரிசுகாட்டிச்
சுதமாகி நிராலம்ப சாக்ஷிபதாய் ஆரம்பத் தன்மையாகி
விதம்பாவும் கடந்துஅவித்தையெனும் இருளைக்கிண்டெழுந்து விமல
மதமாறுங் காணுத ஆநந்தசாகரத்தை மௌனவாழ்வை. [மாகி

—தாயுமானவர்.

ஓம் தத் ஸத். ப. தா.

---

நன்மொழி.

---

93 இவ்வித்து மரமாகி, காய் காய்க்கும் தருணத்தில் அக்காயைப் பார்ப்போம். ஒவ்வொரு காயிலும், பல வித்துகளுள்ளன. ஒவ்வொரு வித்திலும், உள்ளடங்கி புளியம் சிசுவான முளையைக் காண்போம். முதலில் வித்து, கடையில் வித்து, இடைநடுவில் பல மாற்றங்களான, தோற்றங்கள். இதுதான் பிரபஞ்ச இயல்பு இவ்வுவமைதர்சநத்தைச் சாந்தோக்ய உபநிஷத்தில், உத்தாலக மகரிஷி தம்முடைய அருமையான புத்திரனுக்கு எடுத்துக்காட்டி, அதன்மூலமாய் (தத்வமஸி) 'நீ அதுவாக இருக்கிறாய்' என்ற பேருரையை உபதேசித்தார்.

---

* பதம் மூன்று:—சரியை, கிரியை, யோகம் என்பவை.

## மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பது.

[முன் 18-ம் பக்கத்தொடர்ச்சி.]

### 7-ம் அதிகாரம்.

### மனிதர்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டும் என்பது.

1. எல்லாமதங்களும் "கடவுள் ஒருவர் உளரே" என்று ஆரம்பிக்கின்றன; அவ்விதமே, மனித சமூகத்தில் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்ற உபதேசத்தை வற்புறுத்திச் சித்தாந்தப்படுத்தி முடிவுபெறுகின்றன. இவ்விரண்டு உண்மைகளும் இணைபிரியா இரட்டை. பின்னது முன்னதினுள் அடக்கமாயிருக்கிறது. ஒரே உயிராகிய இறைவன் இருக்கின்றமையால், அவரால் உயிர்பெற்று உடல்பெற்று இயங்கும் ஒவ்வொரு ஜீவனும் மற்றைய ஜீவனும் சங்கிலிக் கோவைபோல் இன்றியமையாச் சம்பந்தம் பெறவேண்டுமன்றோ? எல்லா ஜீவராசிகளின் உடல்களும் ஒருங்கே ஒரே சரீரமாகக் கருதற்பாலன. அதன்கண் இயங்கும் பிராணன் ஒருவனே, தேகி ஒருவனே.* அவனே இறைவன், ஈசுவரன். ஒவ்வொருமதத்திலும் மனிதசரீரத்தின் உபமானமாக அந்த மதத்தினரை எல்லாம் சேர்த்து ஒரே உடலாகவும், அவர்களை நல்வழிப்படுத்தும் மதத்தை உயிராகவும் சொல்லுவதுண்டு. உயிரானது சரீரத்தில் இரத்த ரூபமாக நிகழ்கிறதுபோல, கிறீஸ்து என்பவர் அவர் மத கோஷ்டியாரான (Church) சரீரத்திற்கு உயிராக இருக்கின்றனர். சரீரத்தின் யாதேனும் ஒரு அங்கத்திற்குக் கெடுதி நேரிட்டால், சரீரம் முழுவதும் துன்பம் அடையுமாறு போல, ஒரே குலம், ஒரே சரீரமான மனிதசமூகத்தின் ஒரு அங்கத்திற்கு ஒரு கெடுதி நேரிடுமாயின், மனிதவர்க்கத்திற்கே நேரிட்டதாகும். இந்த நெருங்கிய சம்பந்தத்தின் உத்தரவாதத்தினின்று ஒருவனும் விலக ஒண்ணாது. ஒருவனும், பிறருக்குக் கெடுதி நேரிட்டால், தனக்கென்ன, என்று தன்னை வேறுபடுத்தித் தனித்து வாழ்தல் முடியாது. மனிதவர்க்கம் என்ற ஒரே குடும்பத்தில் நாம் பிறந்துள்ளோம். அக்குடும்பத்தில் ஒருவராக வாழ்நாள் கழிக்கக்கடவோம் சகோதரதர்மம் என்பது,

---

* மண்ஒன்று தான்பல நற்கலமாயிடும்
உண்ணின்ற யோகி யெல்லாம் ஒருவனே—திருமந்திரம்.

சுபாவமாக ஏற்பட்ட தர்மம். மனிதனின் கற்பனை அன்று, அதைத் தவிர்க்க முடியாது.

2. வேற்றுமைப்படுத்தும் பிரகிருதிதர்மமானது சுபரபம்பாராட்டும் கருத்தை விருத்திபண்ணுகிறது; அஃது இக்காலமனிதன்விகாசமுறையின் படியின் தர்மமாக ஏற்படுகிறது. எல்லாம் தனக்கு, எல்லா நலமும் தன்னை உத்தேசித்தே என்று இத்தர்மம் நிகழ்கின்றது. ஆனால் மதங்களை ஸ்தாபித்த ஞானசாரியர்கள், அந்தந்த மதத்தினர்களுள், ஒருமை உணர்வு உதயமாகவேண்டுமெனக் கருதியுள்ளார். மதங்கள் அந்தந்த மதஸ்தர்களுள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென வற்புறுத்தி உபதேசிக்கின்றனவே அல்லாமல், பொதுப்படையாய் எல்லா ஜனங்களுக்குள்ளும், சகோதர தர்மம் நிகழவேண்டுமென வியக்தமாக உபதேசிக்கவில்லை. எல்லாமதங்களிலும் கொண்டாடப்பெறும் கடவுள் ஒருவரே என ஏற்படுங்கால், ஒவ்வொரு மதத்தினர்க்குள் நிகழவேண்டுமென உபதேசித்துள்ள சகோதரதர்மம் மதத்தின் வரம்புகடந்து இனி மேன்மேலும் பரவி வருமன்றோ? எல்லா ஜனங்களும் கடவுளுடைய ஒரே குடும்பமாக அமைவார்கள் அன்றோ? *சகோதரதர்மமென்ற நலமான்வித்து ஒவ்வொரு மதத்தின் கண்ணும் போட்டிருக்கிறது. அதினின்று உண்டாகி வளர்ந்துவரும் மரம் சாகோபசாகையாய் மேன்மேலும் அபிவிருத்தியாகி எங்கும்பரவவேண்டும்.

3. உலக சரித்திரங்களைப் பார்த்தால், சகோதரதர்மம் என்பது அரைகுறையாய், அங்கீகரிக்கப்பட்டு, அனுஷ்டானத்தில் வந்திருக்கிறதென்று சொல்லலாமே ஒழிய, எங்கும் ஒரே அபிமதமாய் அங்கீகரிக்கப்பட்டதென்றுவது, எங்கும் பரவி அனுஷ்டானத்தில் இருந்திருக்கின்றது என்றுவது சொல்லமுடியாது. பொதுவாய் அது உயர்நலம் அமைந்த தர்மம் என்று ஆங்காங்கு பிரஸ்தாபம் இருக்கலாம். இப்போது ஒவ்வொரு மதத்தின கடமை என்னவென்றால், மதங்களையும், அதனால் மதத்தினரையும்வேறுபடுத்தும் வரம்புகளையும் மதில்களையும் தகர்த்து சமதளப்படுத்துதலாம். இந்த தர்மம் பரவி அனுஷ்டானம்பெறவேண்டுமானால், இந்த மதத்தை

* ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்—திருமந்திரம்.

அனுஷ்டிக்கவேண்டும், அந்த மதத்தை அனுஷ்டிக்கக்கூடாது, என்ற எண்ணம் முற்றும் தொலையவேண்டும், போகவேண்டும். *அப்போதுதான், இந்த தர்மம் மதங்களுக்குள் பரவும். சகோதரதர்மமானது இயல்பான தர்மம் என்றும், நாமெல்லோரும் ஒரே பிரானனின், அதாவது இறைவனின், ஓர் ஓர் அம்சமாக இருக்கின்றமையால் உண்மையில் நாம்எல்லோரும் ஒரேகுலமாக இருக்கின்றோம் என்பதும், ஒருவன் துக்கம் அனுபவிக்க, மற்றவர் சுகம்பெறல் இயலாதென்றும், ஒருவர் தனித்து உயர்நலம் அனுபவிக்க, மற்றவர் தாழ்மைப்பட்டு துக்கத்தில் உழலுவார்கள் என்பதும் இயலாதென்றும், சுகதுக்கங்களிலும், நன்மை தீமைகளிலும், உயர்வு தாழ்விலும், எல்லாரும் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டிருக்கின்றோம் என்றும், நாம் அறியவேண்டும். ஈசுவரன் எங்கும் பரவி நீக்கமறநிறைந்து அந்தர்யாமியாக இருக்கின்றபடியால், சகோதரதர்மம் இருக்கின்றது என்பது சித்தாந்தம் பெறுகிறது.

4. நான் ஆன்மா என்ற பாவம் உண்டாகாமல், நான் சரீரம் என்ற பாவம் உலகத்தில் வழங்கும் வரையில், சகோதரதர்மம் அனுஷ்டானத்தில் ஏற்படுதல் இயலாததுதான். பிரகிருதிவளர்ச்சியின் தர்மமானது, சுற்றுமுள்ள திரவியங்களை, எப்போதும் கைப்பற்றிச் சுவீகரித்தலும், கைப்பற்றியவைகளைத் தன்மயப் படுத்தலுமாம். அதனால், பிரகிருதிதிரவியங்கள் குறைந்துகொண்டேபோகின்றன. கடைமுறையில் உபயோகத்தினால் மடிகின்றன. பிரகிருதி திரவியங்களுக்கு வரம்புண்டு, அவைகளைச் சுவீகரிக்கஇச்சிக்கின்றவர்கள் பலராவர். ஆகையால் அவைகளைக்கைப்பற்றிஉரிமைப்படுத்தலில்போராட்டமும் நிகழ்கின்றது. பிறரைத்தடுத்தும் விலக்கியும் தானே அடையவேண்டுமெனக் கருதல், தேகமே ஆத்மா என்பவரின் சுபாவம். தான் தேகம் அன்று என ஞானம் ஒருவன் மனத்தின்கண் உதயமாகவே, பிறருடன் தன்னுரிமைகளைப் பங்கிடுதலும், பிறருக்குக் கொடுத்தலும், தன் தர்மம் எனவும் அதுவே தன் அபிவிருத்திக்கு அனுகூலமெனவும் கருதுவான்.

---

* ஆயசமயம் அது இது நன்றெனும்
மாய மனிதர்மயக்கம் அது ஒழி—திருமந்திரம்.

ஞானசம்பத்து அல்லது அறிவுச் செல்வம் பிறருடன் பங்கிடுவதால் குறைவுபடாது. கொடுக்கக் கொடுக்க விருத்திபெறும். ஊற்றுக்கண்ணில், இறைக்க இறைக்க ஜலம் ஊறுமன்றோ? பிறருக்குக்கொடுத்தலினால் அது மேன்மேலும் அதிகமாகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமானவர்களுக்கு அது பயன்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதை உரிமைப்படுத்தியதாகவும், அனுபவித்ததாகவும் முடியும். சகோதரதர்மம் அதாவது, ஆன்மா ஒருவனே என்ற பாவத்தின் வேர் ஊன்றவேண்டும். பின்பு, பிரஞ்ஞாபூமியிலும் பாவனாபூமிகளிலும் வளரவேண்டும், விருத்தி அடையவேண்டும். கடைமுறையில் பிராகிருதி பூமியில் ஸ்திரமாக அமையும். இந்த தர்மமானது ஒருதேசத்தின் சட்ட நிர்மாண சபையாரால் இருக்கவேண்டுமென, ஆஞ்ஞாபிக்கப்பெற்று அனுஷ்டானத்திற்கு வரக்கூடியதன்று. ஜனங்களுக்குள்ளே ஆத்மஞானம் உண்டாகி, அவர்களின் அனுபவசித்தமான உணர்வாக இந்த தர்மம் அமைதல் வேண்டும்.

5. அறிவுபற்றிய விசாரணையிலும், ஆராய்ச்சியிலும், இந்ததர்மம் ஸ்வாபாவிகமென்று எல்லாரும் அங்கிகரியார். அவர்களும் கூட உலக சரித்திரத்தின் ஆராய்ச்சியால், இது இயற்கையான தர்மம் என அங்கீகரித்தல் கூடும். ஒரு விதி அல்லது தர்மமானது அத்துடன் நேர்மையானது இருத்தலினாலும், அதற்கு மாறாக உள்ளது அழிகிறதினாலும் சித்தாந்தம் பெறும். சகோதரதர்மத்தை அலக்ஷியம் செய்து அதற்கு மாறாக நடைபெற்ற தேசங்களும், ஜாதியாரும் மாண்டுபோய்விட்டார்கள். பலிஷ்டர்கள், பலஹீனரைப் பாதுகாக்காமல் துன்பப்படுத்தி ஹிம்ஸித்தலும், செல்வர்கள் ஏழைகளை ஆதரிக்காமல் மோசப்படுத்தி அவர்கள் பொருட்களை அபகரித்தலும், கல்விமான்கள், அறிவில்லாருக்குக் கல்விகற்பிக்காமல் அவர்களை அலக்ஷியம் செய்தலும், இவை தர்மமாக நடைபெறும் நாகரிகம் "அழிவுறும்" என்ற சாபம் இயற்கையாக உள்ளது. அந்நாகரிகம் சொற்பகாலம் இருக்கிறதுபோல் தோன்றும், பின்பு அழியும். சகோதரதர்மம் எப்போது, ஜனசமூகத்தில் நடைபெற இயலுமோ, அப்போதுதான் என்றும் நிலைத்திருக்கக்கூடிய நாகரிகம் ஏற்படும்.

6. இன்னும் ஒரு விஷயம் கவனிக்கற்பாலது. ஒவ்வொரு மதத்தின் ஆரம்பகாலத்தில், சகோதரதர்மம் என்பது சொற்பகாலம் நடைபெற்றிருக்கிறது. பின்பு நாளடைவில் அத்தர்மம் குன்றி மறைகிறது. ஹிந்துமத கிரந்தங்களில் ஆதியில் ஒருகாலத்தில் ஜனங்கள் நேர்மையாக ஒரே குலமாக வாழ்ந்துவந்தார்கள் என்றும், எல்லாரும் கல்வி கேள்விகளுள்ளவர்களாகவும் சுருசுருப்புள்ளவர்களாகவும், எல்லாரும் ஒருவரோடொருவர் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாகவும் இருந்தார்கள் என்றும் பிரஸ்தாபம் வருகிறது. அவ்விதமே புத்தரைச் சுற்றிநின்ற சிஷர்கள் ஒருவரோடொருவர் இனிமையாய் அன்புபாராட்டினார்கள் என்று சரித்திரத்தால் தெரியவருகிறது. பூர்வீக கிறிஸ்துவர்கள் எல்லாப் பொருள்களையும் உலக சம்பத்துக்களையும் பொதுவாக* வைத்துக்கொண்டுவந்தார்கள் எனவும் அவர் அவருக்கு வேண்டியதைப் போதுமானமட்டில் அப்பொதுச் சொத்தினின்று எடுத்து அனுபவித்து வந்தார்கள் எனவும் அறிகிறோம்.

அரேபியாவின் தீர்க்கதரிசியாகிய முகம்மது நபியின் தோழர்கள் சகோதரர்களாகவும் முகம்மதுநபி அவர்களுள் ஜேஷ்டராகவும் ஒழுகலாயினார்கள் என்று தெரியவருகிறது. ஒருமதம் என்று ஏற்படும் பக்ஷத்தில், முதன்மையில், சகோதரதர்மம் மதங்கண் தோன்றுகிறது. அதன் அபிமானி ஒவ்வொருவனும் அந்த தர்மத்தை சுயமாகவே கைக்கொள்ளுகிறான், அனுஷ்டிக்கிறான். ஒருமதத்தின் ஆராய்ச்சியின்பேரிலும் அறிவின்பேரிலும் நன்னம்பிக்கை உண்டாகி அதினிமித்தம் ஒரு மதத்தில் சேருகிறவன், அதில் அன்பும் சிரத்தையுமுள்ளவனாக இருப்பான். அவ்வன்பு பின்பு பெருகி, சகோதர தர்மத்தை இயற்கையாக உண்டுபண்ணும். சொற்பகாலத்திற்கு, வேற்றுமைப்படுத்தும். "ஊனை ஓம்பாது" உயிரைஓம்பி நடப்பான். பின்பு சுயநயம் பாராட்டல் என்ற தீய எண்ணம் கிளம்பும். பின்பு, தான் என்ற அகம்பாவம், பேராசை, ஈரிஷை, பொறாமை இவை தலைப்பட்டு அறிவைக் கெடுத்து மருள்பெறச் செய்யும். துல்லியமான பொன்போன்ற ஞானஒளி மங்கும். அப்படி இருந்தா

*Acts. II—44, 45.

னும், சகோதரதர்மம் என்ற உயர்நலம் அமைந்த அஸ்திவாரத்தின் மேல் ஏற்படுத்தியுள்ள நாகரிகம், முற்றும் அழியாது. அதின்கண் அப்போதைக்கப்போது, ஜீவகாருண்ணியமுள்ள மஹாத்மாக்கள், ஞானிகள், தோன்றிடுவர்; அந்நாகரிகத்தின்உயர்நலத்தைப் பிரகாசிப்பித்துவருவர். இப்படியே தீர்க்கதர்சிகள் குறிப்பித்திருக்கின்றார்கள்; இதையே கவிகள், தங்கள் பாசுரங்களின்மூலமாய், கானம்பண்ணியிருக்கின்றார்கள். தத்துவஞானிகள் பிரஸ்தாபித்திருக்கின்றார்கள். சிலர் அவ்வுண்மையை வற்புறுத்திக் காட்டவே, தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையுமே தியாகம் செய்திருக்கிறார்கள். இத்தர்ம முறையை உலகத்தில் காப்பாற்றும்பொருட்டே மனித வர்க்கத்தின் மூத்தோரான ஞானசாரியர்களின் மஹாசபை யான வெள்ளிஅம்பலம் (The White Brotherhood) ஒன்று என்றும் உளது. இந்த தர்மத்தை நிலைநாட்டும் ஒவ்வொரு மதமும், அன் பின்வழியாக உண்டானது. அதுபற்றியே ஆரம்பத்தில் உலாவியது. இனி அவ்வன்பே உலகத்தில் மேன்மேலும் வியாபித்து, மனித வர்க்கத்தின் முதிர்ச்சிப்பருவத்தில் அதை அடைகாத்து, அதை ஆதரிக்கும்.

ஓம் தத் ஸத்.

A. B. ப. நா.

## நன்மொழி.

---

94. மோக்ஷம் என்றால், நன்மை, தீமை என்ற இரண்டையும் துறந்த நிலைமை. முள் காலில் தைத்தால், வேறொரு முள்ளால் கிளைத்துப் பிடுங்கினோம். பின்பு, இரண்டு முட்களையும் எறிந்துவிடுகிறோம். அம்மாதிரியே, நன்மையையும் துறக்கவேண்டுவது, அப்போதுதான் பற்றற்ற நிலை ஏற்படும்.

95. அறிஞர், ஞானிகள், குரவர் இவர்களின்மேல் அன்பும் ஆதரவும் குன்றி, பணமுடையாரிடம் பூஜை ஏற்படின், தேசம் ஞானவழியினின்று விலகி அதோகதி அடைய ஆரம்பங்கொண்டது என நினை.

# விபூதி தாரணமுறை.

காலாக்நிருத்ரோபநிஷத்தில் அடியில் வருமாறு:—

1. ஒருகாலத்தில் சநத்குமாரர் காலாக்னிருத்ரரிடம் சென்று ஹே! ஸ்வாமிந், விபூதிதாரணமகிமையைக் குறித்து உபதேசம் செய்யவேண்டுமென்று அடியிற்குறித்த ஒன்பது கேள்விகளைக் கேட்டார். அவையாவன:—

(1) விபூதி என்பது என்ன?
(2) எவ்விடங்களில் தரிப்பது?
(3) அவைகளின் பரிமாணங்கள் எப்படி?
(4) ரேகைகளெத்தனை?
(5) உச்சரிக்கவேண்டிய மந்திரங்கள் என்ன?
(6) சக்தி என்ன?
(7) தெய்வம் எது?
(8) கர்த்தா யார்?
(9) பலம் என்ன?

2. காலாக்னிருத்திரரின் மறுமொழி:—அக்கினியில் ஸ்புடம்போட்ட பஸ்மாவை இடது கையில் வைத்துக்கொண்டு வலது கையினால் மூடி

(1) ஸத்யோஜாதம்
(2) வாமதேவம்
(3) அகோரம்
(4) தத்புருஷம்
(5) ஈசாநம் என்ற

ஐந்து பிரஹ்ம மந்திரங்களாலும்

1. அக்னி, 2. வாயு, 3. ஜலம், 4. ஸ்தலம், 5. வியோமம் என்ற ஐந்து பௌதிக மந்திரங்களாலும் ஜபித்து "மா நஸ்தோகே......" என்ற ருத்திர மந்திரத்தினால் தீர்த்தத்தைப் புரோக்ஷித்து சம்புவைத் தியானம்பண்ணி சிரசு, நெற்றி, மார்பு, கைகள் இவைகளில் மூன்று ரேகைகளாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும். இது வேதங்களின் உபதேசம்.

3. பிறகு சநத்குமாரர் நெற்றியின் பரிமாணத்தையும் ஒவ்வொரு ரேகையின் அந்தரங்க அர்த்தத்தையும் சொல்லவேண்டுமென்று கேட்க அதற்குக் கபாலத்தின் கீழும் புருவங்களின் மேலும் நெற்றியின் இரண்டு கோடிவரையிலும் மூன்று ரேகைகளால் தரித்தல்வேண்டும் என்று காலாக்னிருத்திரர் சொன்னார்.

4. இவ்விதமாக பிரஹ்மசாரி, கிருகஸ்தன், வானபிரஸ்தன், சந்நியாசி ஞானி முதலிய எல்லாரும் தரித்துக்கொள்ள அதிகாரிகள்தாம். இந்த அநுஷ்டானத்தால் சகல மஹாபாதகங்களிலிருந்தும் விடுபட்டவர்களாகி தேகவியோகமானபிறகு பரமசாயுஜ்யத்தை அடைகிறார்கள். அவர்களுக்கு புனர்ஜன்மமில்லை. மேற்கண்டபடி பஸ்மதாரணம் செய்வதில், அடியிற்கண்ட அட்டவணையின்கண்ணுள்ள விஷயங்களைச் சிந்தனைகொண்டு செய்வோமாகில் நலம் உண்டாகும். அவ்விஷயங்களை அடிக்கடி சிந்தனைசெய்ய, உண்மைகள் புலப்படும்.

## அட்டவணை விவரம்.

| ரேகைகள். | அக்னி. | ஓம். | குணங்கள். | லோகங்கள். | ஆத்மா. | சக்தி. | வேதங்கள். | சவனம். | ஈஸ்வரன். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலாவது | ஆஹவநீயம் | மகாரம | தமஸ் | த்யௌர் லோகம் | பரமாத்மா | ஞான | சாம | சாயங்கால | மஹாதேவன் |
| இரண்டாவது | தக்ஷிணாக்னி | உகாரம் | ஸத்வ | புவர்லோகம் | அந்தராத்மா | இச்சா | யஜுர் | மத்யாஹ்ன | சதாசிவன் |
| மூன்றாவது | கார்ஹபத்தியம் | அகாரம் | ரஜஸ் | பூலோகம் | ஜீவாத்மா | கிரியா | ரிக் | பிராத | மஹேச்வரன் |

சி. நாராயணஸ்வாமி அய்யர்.

ஓம்.

பரப்பிரஹ்மணே நம:

# பரமாநந்தோதய சாதனம்.

---

ஜீவ வர்க்கத்துள் கரணவியாபாரத்தைச் செவ்வையாகவுடைய பிராணிகளே பிரதிகூல பதார்த்த சம்பந்த ஞானத்தாலுண்டாகும் துக்கத்தை விரும்பாது அனுகூல பதார்த்த சம்பந்தத்தாலுண்டாகும் சுகத்தை விரும்புவதியல்பாயிருப்பது மிகு பிரசித்தமாம். சில சமயங்களில் பிரதிகூல பதார்த்தம் அனுகூல பதார்த்தமாகவும், அனுகூல பதார்த்தம் பிரதிகூல பதார்த்தமாகவும் தோன்றுவதால், நியமமாக இதுவே சுகசாதனபதார்த்தம் இதுவே துக்கசாதனபதார்த்தமென்றுரைப்பதற்கியலாதாம். இது கைவல்லிய நவநீதம் "புலியுமனு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற், புதல்வனெனினும்வெறுப்பாம்" என்று கூறுவதானு முணரப்படும். சுகசாதனமென்று கருதும் பதார்த்தம் துக்கசாதனமாகவும், துக்கசாதனமென்று கருதும் பதார்த்தம் சுகசாதனமாகவும் மாறிப்போவதுபற்றிப் பிராணிவர்க்கங்கள் விருப்பு வெறுப்புகளால் மொத்துண்டு, துன்பக்கடலில் விழுந்து துறைதெரியாது மயங்குகின்றன; மயங்குங் காரணத்தால் சுக துக்க சாதனங்களின் பாகுபாட்டினை யுணராது, இந்திரியங்கட்கு விஷயமாவனவற்றையெல்லாம் சுகசாதனமாகக்கருதிச்சென்று, அவை சுகசாதனமாகாதபோது அவற்றில் வெறுப்புற்றுத்துக்கமடைகின்றன. உண்மையாக நோக்குமிடத்து, இந்திரியங்கட்கு விஷயமாகு மொவ்வொன்றும் துக்க சாதனமேயாகும். ஒருவன் இந்திரபதவியைப் பெற்றாலும், அஃதவனுக்குப் பிரியுங்காலத்துத் துக்க சாதனமேயாகும். அது சுக சாதனமாயின், வெறுப்பிற்கு விஷயமாதல் கூடாது. அக்கினிக்கு இலக்கணம் சூடுடைமையென்று கூறப்படுகின்றது. அவ்விலக்கணம் யாண்டும் பிறழுவதேயில்லை. அஃதாவது அக்கினி, என்றும் சூடுடையதாகவே காணப்படுகின்றது; அதுபோன்று சுக சாதனமாகவேயிருக்கும் பதார்த்தம் இந்திரியங்கட்கு விஷயமாவனவற்றுள் ஒன்றுங்காணேம்.

குளிர்காலத்தில் சுகசாதனமாகக் காணப்படும் சூரியன் முதலியன கோடைகாலத்தில் துக்க சாதனமாகவும், கோடைகாலத்தில்

சுக சாதனமாகக் காணப்படும் பனிநீர் முதலியன குளிர்காலத்தில் துக்க சாதனமாகவுமிருத்தல் கண்கூடாம். இதனால் சுகந்தோன்றுவதற்கும் துக்கந்தோன்றுவதற்கும் முக்கியகாரணம் வேறேயிருக்க வேண்டுமென்பது புலப்படும். சுகமும் துக்கமும் அந்தக்கரண தருமமாயிருத்தலின், அவை விஷயங்களிலிருக்கின்றனவன்றாம்; இஃது ஆடை ஆபரணம், நல்லுணவு முதலிய அனுகூல பதார்த்தங்களின் சம்பந்த ஞான முண்டாயபோது அந்தக்கரணத்திற் சுகந்தோன்றுவதாலும், தேள், பாம்பு முதலிய பிரதிகூல பதார்த்தங்களின் சம்பந்தஞான முண்டாயபோது அந்தக்கரணத்தில் துக்கந்தோன்றுவதாலும் செவ்வனே விளங்கும். இங்ஙனமாகக் கூர்ந்து நோக்கும்போது விஷயங்களிற் சுகமில்லை; அவை ஒவ்வொரு சமயத்திற் சுகசாதனமாயிருக்கின்றனவென்பது விளங்கும்; விளங்கவே, விஷயங்களிற் சுகமுண்டென்று கருதி, அவற்றையடைய முயலுதலும், அவைமாறாது சுகசாதனமா யிருப்பனவாமென்று கருதுதலும் பொருந்து மாற்றோடு (யுக்தியோடு) பொருந்துவ தன்றாமென்பது செவ்வனே புலனாம். விருப்பிற்கு விஷயமாவது சுகமும், வெறுப்பிற்கு விஷயமாவது துக்கமுமாம். மிகுந்த பிரியத்திற்கு விஷயமாவது பரமாநந்த (மோக்ஷ)மும், மிகுந்த வெறுப்பிற்கு விஷயமாவது நரகமுமாம். உடம்பும் அதற்கனுகூலமாயுள்ள பொருள்களும் செவ்வையாகச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்தில் வெறுப்பிற்கே விஷயமாயிருத்தலின், அவை விருப்பிற்கு விஷயமாவன வன்றாம். விருப்பிற்கு விஷயமாகாதிருப்பதுபற்றியன்றே பட்டினத்தடிகள் "ஆனாலுமிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே" என்று கூறியருளினார்கள்.

மலமூத்திரங்கள் நிரம்பப்பெற்று முடிவடைதலையே யியல்பாகவுடைய வுடம்பே பிரத்தியட்சமான நரகமாம்; இதனோடு கூடி வசித்தலே பிரத்தியக்ஷ நரகவாசமாம். இஃதெவ்வாறு விவேகி

ளது மிகுந்த பிரியத்திற்கு விஷயமாகும் ஆத்மா அஃதாவது தான் எஞ்ஞான்றும் மிகுந்த விருப்பிற்கு விஷயமாயிருத்தலின், அதுவே பரமானந்த வடிவமாம்; தான் பரமானந்த வடிவமாக விளங்குதலே மோட்சமாம்; தனது பரமானந்த வடிவம் அந்தக்கரணத்தின் கலக்கத்தால் விளங்காதிருக்கின்றது. அந்தக்கரணத்தின் கலக்கத்திற்கேது, இஃதெனக்கு வேண்டும் என்னும் விஷய விச்சையாம். விஷய விச்சையற்றால், அந்தக்கரணத்தின் கலக்கம் (விக்ஷேபம்) ஒழியும். அஃதொழியப்பெற்றால் அந்தக்க்ரணம் உள்முகப்படும்; உள்முகப்படும்போது, அதன்கண் ஆத்மாவின் பிரதிபிம்ப முண்டாகின்றது; அதனால்ஆனந்தத்தின் விளக்கமுண்டாகின்றது.

ஆனந்தம் விளங்குவதற்கேது மனம் உள்முகப்படுதலும், துக்கம் விளங்குவதற்கேது மனம் பகிர்முகப்பட்டுச் சஞ்சல மடைதலுமாயிருத்தலின், பரமானந்த வடிவமாக விளங்க விரும்புகின்றவன் மனத்தைப் பராக்காக இந்திரியங்களின் வாயிலாக விஷயங்களில் விடாதடக்கி யுள்முகப்படுத்தித் தன்னையே நோக்கியிருக்கச்செய்தல் வேண்டும். "முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள் அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என்ற ஆன்றோர்வசனம் இங்கு கவனிக்கத்தக்கது. மனத்தைத் தன்னையே நோக்கி யிருக்கச்செய்கின்றபோதுதான் அதனிடத்துத் தனதானந்தம் பிரதிபிம்பித்துச் செவ்வையாக விளங்கும். அவ்வானந்தம் விளங்கப்பெற்றவனே சீவன் முத்தனெனப்படுவன். அவனுக்குத்தான் விஷய விச்சை யொருசிறிது மிராது. தான் பரமானந்த சொரூபமென்றறியாதவர்கள்தாம், விஷயங்களிற் சுகமிருப்பதாகக் கருதி யல்லலுற்றுப் பிறந்திறக்கும் தன்மையுள்ளவர்கள். சப்தாதி விஷயங்கள் துக்கவடிவம் அல்லது துக்கசாதனமென்று சற்குருமூர்த்தி வாயிலாகச்சந்தேகவிபரீத மில்லாதுணர்ந்து, தான் கர்த்தா போக்தாவென்னுங் கற்ப

சனையிறந்து நின்றவிடத்திற்றான் மனம் செவ்வையாக உள்முகப்பட்டுத் தன்னை (ஆத்மாவை) யே நோக்கி நிற்கும். அவ்வாறு நிற்றலே நிஷ்டையாம். அப்போதுதான் பரமாநந்தம் தனதுவடிவம்; அது விளங்குவதற்கேது மனம் சின்மாத்திர வாசனையோடு உள்முகப்பட்டு நிற்றலென்பது விளக்கமாம், இங்கு கூறிய வ்விஷயம் குமாரதேவர் அத்துவித வுண்மையில்

"இந்த விஷய மனையில்வருமின்பும் பேரின்பத்திருந்தே,
வந்திலேச மிட்டமது வந்துகிடைத்த வக்கணமே,
அந்த முகமாய் மதிதிரும்பி யறிவாநந்தங் கணம்பொசிக்கும்,
அந்த முகமே யெக்காலு மாகினனைத்து மடைந்ததுமாம்"

என்று கூறியருளியிருப்பதாலும் விளங்கும்.

சின்மாத்திரை வாசனையாவது சர்வாதிஷ்டான பரிபூரண சின்மாத்திரவடிவ சிவத்தில் பாகியாந்தரமான சர்வஜகத்தும், கயிற்றரவு போலக் கற்பிதமாம்; அவை சிவத்திற்கன்னியமன்று; அதுவேநான் நானே அது, என்று பாவித்தலாம். இப்பாவனை செவ்வையாகச் சித்திக்கப்பெற்று, அது வாயிலாக மனம் செவ்வையாக வுள்முகப்படுதலே பரமாநந்த உதயத்திற்குப் பரம சாதனமாம்.

கோ. வடிவேலுசெட்டியார்.

---

## நன்மொழி.

96. மனம் யாதேனும் ஒரு விஷயத்தைப்பற்றியே நிற்கும். அது வேற்றுமையாக இருத்தல் முடியாது. ஒருகுரங்கை ஒரு பேய் பிடித்தது, அது ஒரு மொந்தை கள்ளும் குடித்தது, ஒரு கொள்ளித் தேளும் கொட்டியது. அக்குரங்கின் குதிப்புக்கு வரம்புண்டோ? அம்மாதிரியானது மனத்தின் சஞ்சலம். அச்சஞ்சலம் ஒடுங்கும் முறை பக்தி, கர்மம், ஞானயோகங்கள்.

[32ம் பக்கத் தொடர்ச்சி.]

"பிரசயம்" என்ற சொல்லுக்கு(Aggregate) ஸமஷ்டி என்று பொருள். அந்தப் "பிரசய"மானது சுருதி பேதத்தினல் "ஸ்வரித" மென்றும், "உதாத்த" மென்றும், "அனுதாத்த" மென்றும் மும்முறையாக வேதகானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஸ்வரிதத்திற்கு சுருதி நாலு; உதாத்தத்திற்கு சுருதி மூன்று; அனுதாத்தத்திற்கு சுருதி இரண்டு எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அந்த முறையை வைத்துக்கொண்டு காயகர்கள் ஸங்கீதத்தை அமைத்திருக்கிறார்கள்.


இம்முறை பிணக்கின்றி கணக்கிட்டு அமைப்பதற்கு வீணையே முக்கிய ஸாதனம். மனுஷியனுடைய உடற்கூற்றை அனுசரித்தே வீணையென்னும் வாத்தியமானது அமைக்கப்பட்டிருக்கிறது. மனுஷிய தேகமானது முதுகெலும்பாகிய Spinal chord என்னும் நாடி விசேஷத்தை ஆசிரயித்து நிற்பதுபோல வீணையும் அதின் தண்டியை ஆசிரயித்து நிற்கின்றது. மனுஷியனுடைய முதுகெலும்பாகிய Spinal chord-க்கு வீணாதண்டமென்று பெயர். மனுஷியனுடைய வயிறுபோல வீணையின் வயிறும், அவனுடைய கண்டமும் தலையும்போல வீணையின் நுனிபாகமும் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்க. வீணையில் கோக்கப்பட்டிருக்கும் ஒரு தந்தியை மீட்டினல் உண்டாகும் நாதம் "ஷட்ஜம்" அல்லது "பிரசயம்" ஆகின்றது. அந்தத் தந்தியை சரிபாதியாக வகுத்து பாதியிருக்குமிடத்தில் விரலைவைத்து அமுக்கி, பின்னர் மீட்டினல் உண்டாகும் ஸ்வரம் மேல்ஸ்தாயியின் "ஷட்ஜம்" அல்லது "பிரசயம்" ஆகின்றது. அந்தப் பாதியை இரண்டு பங்காக வகுத்து அதின் பாதியிருக்குமிடத்தில் விரலைவைத்து மீட்டினல் உண்டாகும் ஸ்வரம் மூன்றாவது ஸ்தாயியின் "ஷட்ஜம்" அல்லது "பிரசயம்" ஆகின்றது. முதலாவது ஸ்தாயிக்கு மந்திரஸ்தாயியென்றும், இரண்டாவது ஸ்தாயிக்கு மத்தியமஸ்தாயியென்றும், மூன்றாவது ஸ்தாயிக்கு தாரகஸ்தாயியென்றும் பெயர். அப்படியே மீதிவரும் பாதியைப் பாதியாகவும், மற்றொரு பாதியைப் பாதியாகவும், இவ்விதமாக பாதி

பாதியாகப் பிரித்து விரல்வைத்து மீட்டும்பக்ஷத்தில் அந்தந்தஇடங்களில் நான்காவது, ஐந்தாவது, ஆறுவது, முதலிய கணக்குகளும் (ad infinitem) ஸ்தாயிகளாகவும் அந்தந்த இடத்தில் உண்டாகும் ஸ்வரம் அந்தந்த ஸ்தாயியின் "ஷட்ஜம்" அல்லது "பிரசயமா"கவும் ஏற்படும். முதல் ஸ்தாயி ஷட்ஜம் அல்லது பிரசயத்தின்நாதத்திற்கு எத்தனை vibration அல்லது துவனி நடுக்கமோ அதற்கு இரட்டிப்பான vibration அல்லது துவனி நடுக்கம் இரண்டாவது ஸ்தாயி ஷட்ஜம் அல்லது பிரசயத்தின் நாதத்திற்கு ஏற்படுகிறது. இரண்டாவது ஸ்தாயியின் நாதத்தினுடைய vibration அல்லது துவனி நடுக்கத்திற்கு இரண்டுமடங்கு மூன்றாவது ஸ்தாயியின் நாதத்திற்கு ஏற்படுகிறது. அப்படியே அதற்கு இரண்டுமடங்கு நாலாவது ஸ்தாயியின் நாதத்திற்கு ஏற்படுகிறது. இவ்விதமாக மேல்வரும் ஒவ்வொரு ஸ்தாயியின் நாதமும், அதற்கு முந்திய ஸ்தாயியின் துவனியினுடைய vibration அல்லது துவனி நடுக்கத்திற்கு இரண்டுமடங்கு துவனி நடுக்கத்தை உடையதாயிருக்கும். ஒரு ஸ்தாயிக்கு ஏற்பட்ட விதிதான் எல்லா ஸ்தாயிகளுக்கும் பொதுவானதாகையால் முதலாவது ஸ்தாயியை எடுத்துக்கொள்வோம்.

முதலாவதுஸ்தாயியின் ஷட்ஜம் அல்லது பிரசயத்திற்கு நூறு vibration அல்லது துவனி நடுக்கமிருந்தால் இரண்டாவது ஸ்தாயியின் ஷட்ஜமத்திற்கு 200 vibration அல்லது துவனி நடுக்கம் இருக்கும். அதாவது முதல் ஸ்தாயியின் ஆரம்பமுதல் இரண்டாவது ஸ்தாயியின் இடத்திற்கு வரும்வரைக்கும் மத்தியில் 100 vibration பேதமுள்ள துவனிகள் உண்டாகின்றன. அதாவது, மேல்ஏற மேல்ஏற 101 முதல் 199 வரை vibration உள்ள நாதங்கள் துவனிக்கின்றன. ஒவ்வொரு vibrationம் ஒரு துவனியை உண்டுபண்ணினுலுங்கூட அந்த vibration உடைய நாதத்திற்கும் அதற்கு அடுத்த vibration உடைய நாதத்திற்கும் பேதமானது காதிற்குப் புலப்படாது. ஒரு ஸ்தாயியின் 100 vibration களினுலுண்டாகும் 100 நாதங்களுக்குள் பரஸ்பர பேதத்துடன் ஸ்பஷ்டமாகக் காதுக்குப் புலப்படும் நாதங்கள் 22தான் என்று நிச்சயித்திருக்கிறார்கள். அவைகளொவ்வொன்றுக்கும் "சுருதி" என்றுபெயர்

ஒவ்வொரு ஸ்தாயியிலும் 22 சுருதிகள் அடங்கியிருக்கின்றன. 'Vibration' என்பது நவீனமுறையாகிய 'physical science' என்னும் சாஸ்திரத்தின் கருத்தன்றோ! அதை நமது முன்னோர்கள் எம்முறை அறிந்தார்கள் என வினவலாம். ப்ரணவம் என்னும் சொல்லானது 'ப்ரணு' என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அந்த தாதுவுக்கு நடுக்கமுள்ள சப்தத்தைச் செய்தல், அல்லது, குமுறுதல் என்று பொருள். ஆகவே த்வனியே முதலில் கம்பன ரூபமாக வருவதென்றே நம் முன்னவர் கொள்கை. ஆனால் இத்தகைய கம்பம் (Vibration) என்று அறியும் கருவி (Instrument) இருந்ததாகமட்டும் தெரியவில்லை. ஒரு தந்தியைப் பின்னங்களாக (fractions) வகுத்தால் அந்த பின்னங்களை (fractions)க்குறிக்கிற ($\frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{4}, \frac{1}{5}, \frac{1}{6}$) முதலிய பின்னத்தொகைகளில் கீழ்த்தொகை (Denominator) இத்தனைமடங்கு (Vibration) என்று காட்டுகிறது. அதைக் கவனியாமல் தந்தியின் பின்ன (Fraction) த்தைக்கொண்டு நம் முன்னவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். "சுருதி" என்னும் பதம் "கேட்குதல்" என்னும் பொருளுடையதாகையால் அந்தப் பதத்தைக்கொண்டு கேட்பதற்கு விஷயமாகிய நாதத்துக்கு இலக்ஷணையாகப் பெயரிட்டிருக்கிறார்கள். இந்த 22 சுருதிகளையும் சேர்த்து கானம்பண்ணினால் ஸமஷ்டி நாதமானது காதுக்கு ரஞ்சகமாயிராது. மேலும் பல வேறுபாடுகளுடன் பற்பல கானங்கள் ஏற்படவும் இடமிராது. ஆகவே சிற்சில சுருதிகளைமட்டும் சேர்த்துத் தான் கானத்துக்கு யோக்கியமான நாதவரிசை (ஸ்வராவளி) யை ஏற்படுத்தவேண்டியது. ஒவ்வொரு சுருதியும் ஒரு நாத அணு. அணுவாதிகளாகிய "கணாத" மதஸ்தர்கள் சொல்லுகிறபடி ஒரு அணுமாத்திரம் சிருஷ்டிக்கு யோக்கியமில்லை. த்வ்யணுகம் இரட்டையணுக்கள்; த்ர்யணுகம் மூன்று அணுக்கள்; சதுரணுகம் நான்கு அணுக்கள் சேர்ந்தது தான் வேறுபாடமைந்த சக்திகளுள்ள அணுப்பிண்டங்களாகி சிருஷ்டிக்குக் காரணங்களாகின்றன. அம்முறையே இரண்டு சுருதி (நாத அணு) உள்ளது அநுதாத்த ஸ்வரம், மூன்று சுருதி (நாத அணு) உள்ளது உதாத்தஸ்வரம், நான்கு சுருதி (நாத அணு) உள்ளது ஸ்வரிதஸ்வரம். இந்த மூன்றும் தானகான சிருஷ்டிக்குப் பிரகிருதிகளாகின்றன.

### வீணையின் தந்தி.




(1) மொத்தம் தந்தியில்பாதி A; அது முதலாவது ஸ்தாயி.

(2) A அளவு போக பாக்கி தந்தியில் பாதி B; அது இரண்டாவது ஸ்தாயி.

(3) A, B போக பாக்கி தந்தியில் பாதி C, அது மூன்றாவது ஸ்தாயி.

(4) A, B, C போக பாக்கி தந்தியில் பாதி D; அது நான்காவது ஸ்தாயி.

இவ்விதமாகப் பாக்கியில் பாதியையும், அந்தப்பாதிபோக பாக்கியில் பாதியையும் அப்படியே மீதத்தை மீதத்தைப் பாதிபாதியாய் வகுத்தால் 4-வது, 5-வது, 6-வது ஸ்தாயிகளும் அதற்குமேல் (ad infinitem) கணக்கிலடங்காத ஸ்தாயிகளும் ஏற்படுகின்றன. வீணையின் ஒரு தந்தியை அமுக்காமல் இருந்தபடியே மீட்டுவதினால் ஒரு நாதம் உண்டாகிறது. அதை முதலாவது ஸ்வரமாகவைத்துக்கொண்டால் அதை அனுசரித்த (relative to it) மற்ற ஸ்வரங்கள் அமைகின்றன. மற்ற ஸ்வரங்களை அமைப்பதானது முதலாவது ஸ்வரத்துக்கு அனுசரணை (relative) ஆகவும் வேதகானமுறைப்படி ஸ்வரிதம், உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதமென இந்த வரிசையாகவும் இருக்கவேண்டும்.

[இன்னும் வரும்.]

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர்.

### நன்மொழி.

97. நீ முன்னுக்கு வரவேண்டுமானால், யாதேனும் ஒரு கர்மத்தைச் சிந்தனைகொள்க, சிந்தனைமாத்திரம் போதாது. ஆராய்ந்து ஒரு கர்மத்தைத் துணிக, துணிந்தபின், உன் சக்தி முழுமையும் அது பயன்படும்படி செலுத்துக. பின்பு பயன்பட்டாலும் பயன்படாவிட்டாலும், அதைப்பற்றிக் கவலை கொள்ளற்க.

# பிரஹ்மஞான சபையும் சகோதரபாவமும்.

[ 30-ம் பக்கத் தொடர்ச்சி. ]

---

மதங்களுக்குள் சிநேகதர்மம் உண்டாவதற்கு முன்னர், உலகத்தில் சண்டை, போராட்டம் என்ற பேயை ஓட்டவேண்டும். அஃது உலகத்தை ஒரே அமுக்காய் அழுத்தி, இது காரணமாக எல்லா ராஜாங்கங்களும் நிலச்சேனைகளையும் கடற் சேனைகளையும் ஒருவரை ஒருவர் நம்பாமல் அதிகரித்துக்கொண்டுவருகிறார்கள். வீண்பணச்செலவும் கால விரயமும் புத்தி விரயமும் ஏற்படுகின்றன. இதனால் பொதுப்படையாக, ஜனசமூகங்களுக்கு நல்ல காரியங்கள் ஒன்றும் செய்யமுடியாமல், பல தேசத்திலுள்ள புத்திமான்கள் தயங்குகின்றார்கள். அவயவங்கள் திமிர்ப்பிடித்துக்கட்டுண்டவர்கள்போல இருக்கின்றார்கள். முன்சொன்ன, உயர்தர விவஸ்தையை (scheme) நிறைவேற்றுவதில், முக்கியமானது என்னவென்றால் உலகமுழுமையிலும் சாந்தமும் சமாதானமும் நிகழவேண்டுவதாம். இத்தர்மம் ஏற்படவேண்டி பல விதமான முயற்சிகள் ஏற்கனவே செய்யப்பட்டுவந்திருக்கின்றன. உதாரணமாக, சமாதானம் பயக்கும் சபை (The Peace Conference) ஏற்பட்டிருப்பது இக்கருத்தைக்கொண்டுதான். வேறுவழியாகவும் இம்முயற்சி செய்யப்படவேண்டும்.

8. 5-ம் உள்வகுப்பினர் அவர்களுக்குள்ள தப்பானஎண்ணங்களையும், ஒருவர் மற்றொருவரை அறிந்துகொள்ளாமையால் ஏற்பட்டிருக்கும் த்வேஷ புத்திகளையும், நம்பிக்கை இன்மையையும் தவிர்த்து ஒருவரோடு ஒருவர் சேர்ந்து நடைபெறுவார்களேயாகில், உலகத்தில் பெரிய கைங்கரியம் அவர்கள் சாதிக்கக்கூடியவராவார். 5-ம் மனித வர்க்கத்தில் கடைசியாக அபிவிருத்தி அடைந்து வந்திருக்கின்றவர்கள் 5-ம் வர்க்கத்தின் 5-ம் உள்வகுப்பினராகிய டியூடானிக் ஜாதியார்தான். அதனால், உலக விகாசமுறையில், அதிகமாக அபிவிருத்தி அடைந்து உயர் நலம் பெற்றிருக்கின்ற ஜீவாத்மாக்கள் இச்சாதியாருக்குள் சரீரம் எடுத்திருக்கின்றார்கள். ஆனால், இவர்களில் பெரும்பாலர் உலகமெங்கும் சமாதானகாலம் உண்டாவதற்கு அனுகூலமாய், சுயலாபம் தவிர்த்து பிறர் நயம் ஓம்பும் மனோதர்மத்தை உடையவர்களாய் இருப்பார்கள் எனத் தோன்றவில்லை.

9. இப்படியிருக்குமாகில், உத்தேசித்த சாந்தமும் ஸமாதானமும் உலகத்தில் எவ்விதம் ஏற்படுவதாகும் என்ற வினா பிறக்கும். உலகமுழுமையும் சமாதானம் ஏற்படுதல் அவர்களுடைய சுயலாபத்தையே அதிகப்படுத்தும் என்று அவர்கள் எண்ணற்பாலர். சண்டைக்காலத்தில் வியாபாரம் சோர்வுபடும், குறையும். பலவகுப்பினரான டியூடானிக்ஜாதியார்களே, இப்போது அதிகமாக வியாபாரத்தொழில்களைப் பலவாறாகநடத்துகின்றவர்கள். அதனால், தங்களுடைய சுயலாபத்தைக்கருதியே, உலகமெங்கும் போர்தொலைந்துசமாதானம் உண்டாகும்படி ஒப்பந்தம்செய்துகொள்வார்களென நம்ப இடமுண்டு. இக்காரணமானது உயர்ந்த மனோதர்மத்தைப்பற்றியதன்று. இது சொந்தலாபத்தைக் கருதியதுதான். ஆயினும் அறிவின் மிக்காரானவர்களும் அவர்களின் மந்திரிமார்களும் மனிதவர்க்கத்தில் பொதுப்படையாகப்போர்குன்றி, அன்பின்வழியில் ஐக்கியபாவம் உண்டாகி நிகழவேண்டுமென்று கருதும்பொழுது, அறிவின் கீழானபடியில் இருக்கின்றவர்களான சாதாரண ஜனங்கள் சுயநலம் பாராட்டுகின்ற கீழானகருத்துடன் போர்வேண்டாமென்ற விஷயத்தில், இணங்குவார்களாகில், இருவர்கள் கருத்தின் பயன் ஒன்றாகும். உத்தேசித்த காரியமான, உலகமுழுமையும்சமாதானம்நிறைவேறுதலில், ஏற்படும் முயற்சிகளைச்சாதாரண ஜனங்களும் ஆதரிப்பார்கள். இச்சாதியார்கள் ஒருங்கே சேர்ந்து நேர்மையுடன் நடை பெறும் படியாக, அப்போதைக்கப்போது உலகத்தில் நேரிடும்சம்பவங்கள் எல்லாம் உதவுகின்றன. உதாரணமாக, மஹாராணி விக்டோரியா அம்மையாரின் மரணம் இவ்விதம் உபயோகப்படுத்தப்பெற்றது. அவ்வம்மையாருடைய செல்வாக்கினாலும் நன்மையாலும் தன் சொந்த தேசமாகிய இங்கிலாந்தும், அதினின்று பிரிந்திருக்கின்ற (Colonies) காலனிக்களும் ஐக்கியமாகவே இருந்துவந்தன. அதிகமான அந்நியோந்நிய இணக்கமும் உண்டாயின. மஹாராணி அவர்களின் ஜூபிலிஉஷர்கோலக்காக்ஷியைக் கண்டவர்கள், அம்மஹாராணி அவர்களின்மீது ஜனங்கள் மனங்களில் அக்காட்சியினால் உண்டான அன்பின் பிரவாகத்தை உணர்ந்து உவந்திருப்பார்கள். அம்மஹாராணி அவர்கள் ஜீவித்திருந்த காலத்தில், ஜனங்களிடம் ஐக்கியம் உண்டாகும்படியாக, நலமாக ஒழுகிவந்தார்கள். அவர்கள் மரணகாலத்தில்,

ஜனங்களுக்குள் இன்னும் அதிக உயர்நலம் அமைந்த அன்பும் ஆதரவும் உள்ள தர்மங்கள் அதிகமாக ஏற்பட்டன. அவர்கள் மரணசம்பவத்தால், காலனீக்களும்(Colonies)அமெரிக்காவின்ஐக்கியமாகாணமும் இங்கிலாந்துடன் முன்னிருந்ததைவிட அதிகமாக அன்பான உறவுகொண்டாடின. அம்மஹாராணி அவர்கள்பால் ஐக்கியநாட்டு ஜனங்களுக்குள்ள பக்ஷமும் விசுவாஸமும், அவர்களின் மரணத்தால் உண்டான உண்மையான துக்கமும் மனவருத்தமும், மிகவும் அதிகமாக இருந்தன. அம்மஹாராணி அவர்களை, தங்களுடைய சொந்த அரசிபோல நினைத்து மனம் உருகினார்கள் என்று சொல்லலாம். உயிருடன் இருந்த காலத்திலும், மரணகாலத்திலும், மஹாராணி அவர்களின் நன்மையும் செல்வாக்கும், உலகத்திற்கு உயர்நலத்தை உண்டுபண்ணியது.

11. ஒவ்வொரு ஜாதியாரும், ஒவ்வொரு மனிதன்போல விசேஷ சுபாவங்கள் சில விசேஷ குணங்கள் அமையப்பெற்றிருக்கிறார்கள். நம்முன் நிற்கின்ற அப்பெரிதான விவஸ்தையானது பூர்த்திபெறவேண்டுமானல், பிறச்சாதியார்களின் சுபாவங்களைக்கண்டு ஏளனம் செய்யாமலும் வெறுக்காமலும் அன்புடனே பொறுமைபாராட்டிநடைபெறும்படி பழகவேண்டும். ஜனசமூகங்களின் பெரிய விஷயங்களைப்பற்றி நாம் நடந்துகொள்ளுமுறை யாதெனில், நம்முன் யாவரேனும், பிறச்சாதியாரைப்பற்றி இகழ்ந்து நிந்தனைமொழி வசனித்தால், அச்சாதியாரின் நற்குணங்களை எடுத்து உரைப்பதுமன்றி அவர்மேல் அன்பு ஆதரவான விஷயங்களை யாதேனும் சொல்லவேண்டுமெனத் தீர்மானம் கொள்ளவேண்டும். அவர்களுடைய தீமையான காரியங்களைப் பிறர் சொல்லுங்கால், அவைகளை அநேகமாக மறுக்கமுடியாமற் போயினும், அவர்களைப்பற்றி யாதேனும் நன்மையான விஷயத்தைச் சொல்லுதல் கூடுமாயின் அதைச் சொல்லுக.

12. நம்மில் அநேகர் ஒரு வருஷகாலத்தில், 1,000 பேர்களை யாவது சந்திப்போம். நாம் ஒவ்வொருவரும் பிறச்சாதியார்களிடம் நலத்தை மாத்திரம் அறிந்து மதிக்கவேண்டுமென்பதாக, நம்மவர்களிடம் வற்புறுத்திச்சொல்லக்கூடுமல்லவா? இதுஅற்பமான விஷயமாயினும், இவ்விதமேபழகிஒழுகுவோமாகில், பலஜாதிஜனங்களுக்குள்

நேர்மையும், சிநேகமும், நெருங்கிய இணக்கமும் உண்டாவதற்கு அநுகூலங்கள் அமையச்செய்வோம். அநேகர் பிறச்சாதியார் களின் குற்றங்களையே விரிவாகப் பேசிக்கொண்டிருக்கும் சுபாவம் உள்ளார். நாம் அவ்விதம் செய்யாமல் இருப்போமே! சிநேகபாவம் அபிவிருத்தியாகச் செய்தலின் பெருமையை எப்போதும் நம்மனத்தில் சிந்திப்போமே! இவ்விதமாக, நாம் தனித்தனி ஒவ்வொருவரும் செய்யற்பாலம், அற்பமெனநினைக்கக்கூடாது. நம்முடையநலமுள்ள ஒவ்வொரு சிறு முயற்சியையும், செயலையும் மஹாத்துமாக்கள் பயன்படும்படி செய்வார்கள் என நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களே உலகத்தின் பெரியசம்பவங்களை, உள்ளேநின்று, கொண்டு செலுத்துகின்றார்கள் என உணரவேண்டும். அவர்களால் உத்தேசித்த விவஸ்தையும் தீர்மானமும் தானாக நிறைவேறிவிடும். நம்முடைய சம்பந்தம் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்று இருக்கக்கூடாது. நம்மால் கூடிய நன்மையை நாம் ஏன் செய்யாமல் இருக்கவேண்டும் என எண்ணுக.

13. நலம் அமைந்தஒரு பெரியகாரியம் முடியவேண்டுமானால் நல்லோர்களும், பெரியோர்களுந்தான்சேர்ந்து முடிக்கின்றார்கள் எனக் கருதவேண்டாம். எத்தன்மையர்களாயினும் சரி, வெள்ளியம்பலம் என்று சொல்லப்பெறும் மஹாசபையார், எல்லாரையும், தங்களுடைய பெரிய காரியத்தை நிறைவேற்றுதலில் உபயோகிப்பார்கள். சுயநலம் விருப்பமுள்ளான், குற்றங்கள் உள்ளான், குறைகள் உள்ளான், எல்லாரும் அவர்களுக்கு உபயோகந்தான்.

C. W. L. ப. நா.

## நன்மொழி.

98. வீண்கவலையைத் தவிர், உன் செயலுக்கு மீறின காரியத்தை ஏற்றுக்கொள்ளாதே. அவன் அவன் தகைமைக்கும் செயலுக்கும் தக்கபடி அவன் காரியத்தில் முயலவேண்டும். முடியாத காரியத்தில் பிரவேசித்து வீண் வருத்தம்கொள்ளாதே. அது நலமன்று. அக்காரியத்தில் பிரவேசித்தல், பிறர் உத்தரவாதத்தைத் தடுத்தலுமாகும்.

—o—

ஆரியருடைய சங்கீத சாஸ்திரத்தின் சரித்திர சங்கிரகம்:—இது தர்மரக்ஷண சபையின் 3-ம் வருஷோத்சவகாலத்தில், கோயம்புத்தூர் ஸ்ரீமான் பகடால் நரசிம்மலு நாயுடு அவர்கள் செய்த உபந்நியாசம். சங்கீதத்தின் உற்பத்தி, உயர்வு, வரலாறு, அதைப்பயின்ற சங்கீத வித்துவான்களின் பெயர்கள், அதன் இக்கால இழிவு நிலை இவை எல்லாம் விஸ்தாரமாக இவ்வுபந்நியாசத்தின்கண், எளிய தமிழ்நடையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. முற்காலத்தில் ஹிந்துராஜாக்கள் சங்கீத வித்வான்களை ஆதரித்துவந்தார்கள். இக்காலத்தில், ஹிந்து ராஜாக்களில் சிலர்தான் நம் தென்னாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் மேனாட்டு சங்கீதத்தை ஆதரவு பண்ணுகின்றார்கள். நம்முடைய பூர்வீக சங்கீதத்தை அநாதரவு செய்கின்றார்கள். மேலும் போனகிராப் என்ற யந்திரம் தலைப்பட்டுப் பரவிக்கொண்டுவரவே, சுபசோபனகாலங்களில் ஆங்காங்கு ஏற்பட்டுவந்த சங்கீத கச்சேரிகள் இப்போது குறைவுபடுகின்றன. சங்கீத வித்வானின் ஆதரவு இன்னும் வரவரக் குறைந்துவருமென நினைக்கின்றோம். போனகிராப் யந்திரம சங்கீத வித்வான்களுக்குக் கொடிய பகையாக இருக்கிறது. நம் தேசத்திலுள்ள ஆண் பெண் சங்கீதவித்வான்கள், போனகிராப் கம்பெனி யேஜண்டுகளால் அளிக்கப்படும் சொற்ப திரவியத்திற்கு ஆசைப்பட்டு சில பாடல்களைப் பாடவே, அவைகள் இந்த போனகிராப் யந்திரத்தில் பதிப்பிக்கப் பெறுகின்றன. பின்பு அவைகள், பலவாறாக ஒரேமாதிரி ரிக்கார்டுகளாகப் பெருகுகின்றன. இவ்விதம் நம் தேசத்துப்பாடகர்கள், தாமே, தாம் நாசமுறும் வழியைத் தேடிக்கொள்ளுகிறார்கள். நம்முடைய சங்கீதசாஸ்திரம் விர்த்தியடைந்து, நம்முடைய சங்கீதவித்வான்கள் ஆதரவு பெறவேண்டுமானால், இந்த போனகிராப் யந்திரத்தை நம்மவர் வாங்காமலும் ஆதரவு செய்யாமலும் இருத்தல் வேண்டும். நம்முடைய சங்கீத வித்வான்கள் ஸ்திரீயாகஇருந்தாலும்சரி புருஷனாக இருந்தாலும் சரி, இனி எவ்வித பண ஆசைக்குட்பட்டும், இந்த போனகிராப் ஏஜண்டுகளுக்கு பாடல்களைப்பாடி பதிப்பிக்கும்படி எவ்வித உதவியும் புரியாமல் இருத்தல் வேண்டும். சங்கீதவித்வான்களை ஆதரிப்பதற்கு சில இடங்களில், சங்கீத சபைகளையும், அவைகளை அண்டி சங்கீதவித்யாசாலைகளையும் ஏற்படுத்தல் வேண்டும். அந்தந்த ஊர்களில் நடக்கும் உற்சவகாலங்களிலும் சுப சோபனங்களிலும் சங்கீத கச்சேரிகள் அடிக்கடி ஏற்படவேண்டும். வேதம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, முதலியவைகளும், தாயுமானவர் முதலியவர்கள் பாடல்களும் தியாகையர் முதலியவர்களின் கானரசங்களும் எங்கேபார்த்தாலும் சோஷிக்கவேண்டும். ஆலயங்களிலும் இவைகளை நிரந்தரமாக நடைபெறும்படியாகச் செய்யவேண்டும், இவ்விதம் செய்

வோமாகில் சங்கீதத்தை ஆதரவுபண்ண முயலுபவராவோம்.

ஆரியர்களாகிய நாம், பல சமயங்களில் சங்கீதத்தை அத்யாவசியமாகக் கொண்டிருக்கிறோம். பிறப்பு முதல் மரணம் ஈறாக, பற்பல காலங்களில் சங்கீதமின்றி செய்யும் காரியங்கள் அவலமாகும். அதனால் ஒவ்வொரு ஆரியனும் சங்கீதத்தை தான் கற்காவிடினும் அதை எவ்விதத்தாலும் ஆதரவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். சங்கீதத்தைப்பற்றி நம்முடைய பத்திரிகையில் விரிவான விஷயங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவைகளைக் கவனமாய் நம்மவர் படிப்பார்களாக.

---

## பத்திரிகைவரவு.

**அமிர்தவசனி:**—இப்பெயருள்ள மாதப்பத்திரிகை திருவனந்தபுரத்தில் இவ்வருஷம் சித்திரைமாசமுதல் பிரசுரமாகிவருகிறது. நமக்குக் கிடைத்திருக்கிற உ-வது பகுதியைக்கொண்டு இப்பத்திரிகையின் தகைமையை யோசிக்குமளவில், அது நன்றாய் நடத்தப்படுகிற தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றாக சீக்கிரத்தில் ஆகலாமென மதிக்கின்றோம். இதில் பல உபயோகமான விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன. திருவனந்தபுரத்தில், ஜாதிகளுக்குள் நடைபெறுகிற துவேஷங்கள் குறையும்படி இப்பத்திரிகை பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென விரும்புகின்றோம். இப்பத்திரிகையின் வருஷசந்தா ரூ ஒன்றுதான்.

**சநாதநதர்மம்:**—இது மாதம் ஒருமுறை மலையாளபாஷையில் கள்ளிக்கோட்டையில் பிரசுரமாகிவரும் பிரஹ்மஞானசபை சம்பந்தமான பத்திரிகை. முதற்பகுதி சென்ற மேயீ 8உ வெளிவந்தது. மாக்ஷிமைதங்கிய மாதாஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையாரின் படமும், சரித்திரச்சுருக்கமும் வெளிவந்திருக்கின்றன. முதல்மாசப் பொருளடக்கம் மிகவும் உபயோகமான விஷயங்களைப் பற்றியதாகத் தெரியவருகிறது. பிரஹ்மஞான உண்மைகளை நம்மவர்களுக்குத் தெரிவிப்பதற்காக தமிழில் நம்முடைய பூர்ணசந்திரோதயமும், தெலுங்கில் தத்வஞானபத்திரிகை என்றபத்திரிகையும் கன்னடத்தில், சுபந்தா என்றுபெயருள்ள பத்திரிகையும் மலையாளத்தில் சநாதநதர்மம் என்றுபெயருள்ள பத்திரிகையும் வெளிவந்து உலாவுகின்றன. அவைகள் மேன்மேலும் அபிவிருத்தியாகி நம் ஜனசமூகத்துக்கு நலந்தரும் ஞானசாதனங்களாக ஏற்படுமெனநம்புகின்றோம். அவைகளின்மேல் மஹாத்மாக்களின் காருண்ணியமான கடாக்ஷம் இருக்கவேண்டுமெனப்பிரார்த்தனை.

பத்திராதிபர்.

## சமாசாரம்.

**வேதாரண்யத்தில் பிரஹ்மஞான சபைக் கூட்டம்:**—சென்றமாதத்தில் 20-21-வகளில் வேதாரண்யம்என்ற திவ்வியக்ஷேத்திரத்தில், தஞ்சை ஜில்லா பிரஹ்மஞானக்கிளைச் சங்கங்களின், கான்பிரன்ஸ் கூடியது. மகா-ா-ா-ஸ்ரீ நீலகண்டசாஸ்திரிகள் அக்கிராஸனம் வகித்தார்கள். பிரஹ்மஸ்ரீ ப. நாராயண அய்யர் அவர்கள், டாக்டர் கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள், ஸ்ரீமான் இராமச்சந்திர நாயக்கர் அவர்கள், பிரஹ்மஸ்ரீ சுந்தரராஜஅய்யர் அவர்கள் முறையே, தேவாலயம் அதன்சீர்திருத்தம், தேகதத்துவம், பால்யவிவாஹம், பிரஹ்மஞானசபையின்மஹாத்மாக்கள்.இவைகளைப்பற்றி உபந்நியாஸம் செய்தார்கள். தில்லைவிளாகம் ஷண்முகஸ்வாமிகள் சைவசித்தாந்தத்தின் சிலஅம்சங்களைப்பற்றி ஒருஉபந்நியாசம்அச்சியற்றி அனுப்பினார்கள். அதுவும் படிக்கப்பெற்றது. மகா-ா-ா-ஸ்ரீ நீலகண்டசாஸ்திரிகள் மிகவும் அழகாய் மனத்தில் பதியும்படியாக, மஹாத்மாக்களைப்பற்றி விரிவாய் இரண்டுமணிதேசகாலம் பேசினார்கள். வேதாரண்ய க்ஷேத்திரத்தார் விருந்தோம்பல் என்ற அதிதிபூஜையை நன்றாய் நடத்தினார்கள். எல்லாம் யாதொரு குறைவின்றி ஈசன் அருளால் நடைபெற்றது.

**பிராணிகளின் வயதுக் கிரமம்:**—பிராணிகளின் சாஸ்திரி ஒருவர் பின் வருமாறு எழுதுகின்றார். முயலின் வயது6-அல்லது 7-வருஷம் பூனையின் வயது 15 முதல் 17, வருஷம். நாயின் வயது 16, முதல் 18 வருஷம். காடியின்வயது 18, முதல் 20, வருஷம். காண்டாமிருகத்தின் வயது 20 முதல் 22 வருஷம். குதிரையின்வயது 22 முதல் 25 வருஷம். ஒட்டகை வயது 60 வருஷம். பசுவின்வயது 60 வருஷம். ஆமையின் வயது 1 முதல் 10 வருஷம். கழுகின்வயது 129 வருஷம. யானையின் வயது 400 வருஷம். திமிங்கிலத்தின்வயது 1000 வருஷம்.

**பக்ஷிகள் ஆட்டிடையர்களின் தொழில்செய்தல்:**—(British Guiana, Venezula) பிரிட்டிஷ்கையானு, வெனிஸூலா நாடுகளில் கொக்குவர்க்கத்தைச் சேர்ந்த ஒருவிதமான பக்ஷிகள் இருக்கின்றன. அவைகளுக்கு (Yakamik) யாகமிக்என்று பெயர். அவைகள் ஆட்டுமந்தைகளைக்காக்கின்றன. காலையில் கிராமத்திலிருந்து மேயும் இடத்திற்கு அவைமுன்போக, ஆடுகள்பின்தொடர, இவ்விதம்நடத்துகின்றன. சாயங்காலமும், மேய்ந்தபின்பு அவ்விதமேஅவைகளைக்கூட்டிக்கொண்டு திரும்புகின்றன. வேறு மிருகங்கள் ஆடுகளைத்தாக்கி இம்விதத்தால் இந்தக்கொக்கு தன் மூக்காலும் இறக்கையாலும் தாக்கித் துறத்துகின்றது. நாய்களைவிட அதிகத்திறமையுடையவைகளாக இப்பக்ஷிகள் இருக்கின்றன. ஆடுகள்மேய்ந்து ஊருக்குத்திரும்பி கொட்டங்களில் அடைபட்டமேல், கொட்டங்களின் முகட்டின் மேலாவது அருகாண்மையிலுள்ள மரங்களிலாவது இவைகள் தங்கி ஆடுகளைக்காக்கின்றன. ஜெர்மானியா தேசத்தில் ஒருகிராமத்தில் இவ்விதமாகப் பசுக்களைக் காக்கும் வேறொரு ஜாதிக்கொக்கு இருக்கிறதென்று பத்திரிகைகளால் தெரியவருகின்றது. இவைகளைக் கவனிக்குங் காலத்தில் ராமாயணத்தில் ஜடாயுஎன்றபக்ஷியானது இராவணனுடைய அநீதியைச்சகிக்காமல், அவனைப்

பன்முறை தாக்கி சீதாபிராட்டியைப் அவனுடைய ஸ்வாதீனத்திலிருந்து விலக்கிவிடச் செய்த முயற்சி வெறுங்கதையல்லவென்றும், யதார்த்தமானதென்றும் மதிக்கலாம்.

அமெரிக்கா தேசத்தில் ஹிந்து சங்கீதம்:— 19–வயதுள்ள சத்திய பாலாதேவீ என்று பெயருள்ள ஒரு பிராஹ்மண ஸ்திரீயானவள் அமெரிக்காதேசம் சென்று, நூயார்க்கு (New Yoık) நகரில் ஒரு பெரிய சங்கீத வித்வந்சபையின் முன்னர் ஹிந்துக்களின் சங்கீத முறையைப்பற்றி வெகு அழகாயும் விஸ்தாரமாயும் ஒரு உபந்யாஸம் செய்தார். டாக்டர் சி. ஏ. வீலர் என்ற வைத்திய சாஸ்திரியார் அக்கிராஸனம் வகித்தார். அவர் முடிவுரையின் சுருக்கம் அடியில் வருமாறு:— 19வயதுள்ள இம்மாது சிரோமணி மனிதப்பிறப்போ அல்லது தெய்வப்பிறப்போ, என்ன சொல்லுவேன்? மிகவும் கஷ்டமான இந்த சங்கீதத்தின் எத்தனை விதமான ராகங்களையும் பாடல்களையும் இந்த அம்மை செய்தார். மிகவும் அற்புதமானதாக இருக்கிறது. ஆடம்பரங்களைத்தவிர்த்து ஐரோப்பிய சங்கீதத்தை, இத்துடன் ஒப்பு நோக்கி ஆராய்ச்சி செய்தால், இந்த சங்கீதத்தின் உயர்வும் ஐரோப்பிய சங்கீதத்தின் தாழ்மையும் நன்கு வெளியாகும். சங்கீதத்தில் ஒருத்தலைவலி, தூக்கமின்மை, எப்போதும் வியசனமாக இருக்கும்தன்மை, வலிப்புமுதலிய வியாதிகள் ஒழியும், தீரும் என பலமுறை அநேக வருடங்களாக, நான் வற்புறுத்திக்கொண்டுவருகின்றேன். அக்கிராஸனம் வகிக்கும் முன் எனக்குத்தலைவலி இருந்தது. இந்த அம்மையார் செய்த கானத்தினால் அந்தத்தலைவலி போய்விட்டது. இந்தஅம்மை இந்தியா தேசத்திற்கு ஒருபெரியஉபகாரம் செய்கின்றார். அதாவது, இந்தியசங்கீதத்தின் உயர்வை எங்கும்பிரஸித்தம் செய்துவருகின்றார். அநேக ஐரோப்பியரும், அமெரிக்கர்களும், இந்தியா தேசத்திற்குப் போகின்றார்கள். கிளிஞ்சல், படங்கள். ஸ்வாமி விக்கிரகங்கள் முதலான கீழ்க்கடையானசாமான்களை மிகப்பிரியத்துடனே சேகரித்துக்கொண்டு திரும்புகின்றார்கள். இந்தியரின் குப்தமான சங்கீதமுதலிய கலா. சாஸ்திரங்களைக்கொஞ்சமேனும் அறிய முயற்சிக்கின்றார்களில்லை. அவர்கள் யாத்திரையின் அனுபவமெல்லாம் வெள்ளமிலாயிருக்கின்றது. ஆழ்ந்ததாகத் தோன்றவில்லை. ஆனால் ஒரு விஷயம்தான் தெரிவிக்கிறேன். அமெரிக்கர்களாகிய நாம் அற்பத்தனமுள்ளவர்களல்லர்; பெருந்தன்மையராவோம். அந்நியதேசத்திலிருந்து பேர் ஊர் தெரியாதவர்கள் நம்தேசத்திற்கு வருகின்றார்கள். அவர்களுடைய சொந்த தேசத்தினர் காணாத நலத்தை அவர்களிடம் கண்டுமெச்சுகின்றோம். பின்பு உலகில் பிரஸித்தம் செய்கின்றோம். பின்பு, அவர்கள் அவர்களுடைய சொந்த தேசத்திற்குப்போன மேல், அவர்கள் நலம் வெளிப்படுகின்றது. நம் தேசத்திற்கு வருமுன், இந்தியர்கள் ஸ்வாமி விவேகாநந்தரை அறியார்கள். பின்பு உலகப்பிரஸித்தம் பெற்றவராக நாம் ஆக்கினோம். அவ்விதமே இந்த அம்மையாரை இந்தியர் இப்போது அறியார். நம் தேசத்தில் பிரக்கியாதி பெற்ற மேல், அவர் இந்தியாவுக்குத் திரும்புவார்; பின்பு இந்த அம்மையாரின் உயர் நலத்தையும் அறிவின் விசாலத்தையும் அறிவார், மெச்சுவார், கவுரவப்படுத்துவார். இந்த அம்மையாருக்கு நாங்கள் பிரதிநிதியாக வந்தனம் அளிக்கின்றேன். அவர் நீடூழி வாழி.

## புதிய சர்வகலாசாலைகளை ஸ்தாபிக்கு முறையில் பிரயத்தினங்கள்.

சில வருஷங்களுக்குமுன்னர் (சுமார் 13-வரு இருக்கலாம்) காசி க்ஷேத்திரத்தில், மாதா ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் நம்மவர்களில் அநேகருடைய ஆதரவுகொண்டு ஒரு கல்லூரி (வித்தியாசாலை) யை ஸ்தாபித்தார்கள். அவ்வித்யாசாலையில் இப்போது ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், மேனாட்டுச் சாஸ்திரங்கள், இந்திய தேசத்தின் சாஸ்திரங்கள், மிகவும் திருப்தியாக நம்மவர்களுடைய மாணவர்களுக்குக் கற்பிக்கப்பெற்றுவருகின்றன. ஷை வித்தியாசாலையில் உயர் நலமுள்ள கல்வித்திறமை நடத்தப்பட்டுவருகின்றது. அக்கல்விச்சாலை ஸ்திரப்படும்படி, பல இடங்களுக்குச் சென்று ஷை அம்மையார் திரவியம் சேகரித்துக்கொண்டுவருகிறது யாவரும் அறிந்த விஷயம். அதற்காக தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்துகொண்டு வருகிறார்கள் என்பது உலகப்பிரசித்தமானது. அது நிற்க. இந்தியா தேசமுழுமையும், ஒருங்கு சேர்ந்து ஏகோபித்து நடைபெறவும், மதத்துவேஷங்கள் குன்றுவதற்கு அனுகூலமாக, ஒருபெரிய ஸர்வகலாசாலை (University) ஸ்தாபிக்கப்பெற்றால், அது நலந்தருமெனக்கருதி பலஇடங்களில் அவ்வம்மையார் அதுவிஷயமாகப் பிரஸ்தாபித்தும் உபந்நியசித்தும் வந்தார்கள். பின்பு பலஇராஜதானிகளிலுள்ள பிரபுக்களுடனும், அறிஞர்களுடனும், கல்விமான்களுடனும் அவர்கள் ஆலோசித்து இந்தியா ஸர்வகலாசாலை என்ற நாமதேயத்துடன், ஒரு கலாசாலையின் விவஸ்தை (Scheme)யை ஏற்படுத்தி, அநேகபிரபுக்கள், புத்திமான்களின் கையொப்பம் சகிதம் ஒரு விண்ணப்பம் தயாரித்து மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்களின் அனுமதி (Charter) பெறவேண்டுமென்ற நோக்கமாய், கனந்தங்கிய கவர்னர் ஜனரல் மின்டோ அவர்களின் சிபாரிஷுடனே, அதை சீமைக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அதில் ஹிந்து பிரபுக்களும், பார்ஸி பிரபுக்களும் கிறிஸ்துவப் பிரபுக்களும் கையொப்பம் வைத்திருக்கிறார்கள். பின்பு, அது அனுகூலம் பெறும்படியாக பலவிடங்களில் ஜனங்களுடைய ஆதரவை ஷை அம்மையார் நாடி உபந்நியஸித்துவந்தார்கள். பின்னர் கனந்தங்கிய மகம்மதியபிரபுவாகிய ஆகா கான் என்பவர்களும், கனந்தங்கிய அமீர் ஆலி என்பவர்களும், பின்னும் சில மகம்மதிய புத்திமான்களும் ஆலோசித்துத் தங்கள் இஸ்லாம் மதஸ்தர்களுக்குத் தனிமையாக ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபித்தல் மிகவும் நலந்தருமெனக்கருதி அவ்விஷயமாக ஷை ஆகா கான் என்பவர்கள் நம்தேசத்தில் பலவிடங்களில் சென்று மகம்மதிய பிரபுக்களையும் அறிஞர்களையும் ஒன்றுசேர்த்து அவர்களின் ஆதரவுகளைப் பலப்படுத்தி மகம்மதியர்களுக்காக பிரத்தியேகமான ஒரு சர்வகலாசாலையின் வியவஸ்தையை ஏற்

படுத்தியிருக்கின்றனர். இக்கலாசாலையை அல்லிகர் நகரத்தில் ஸ்தாபிக்க வேண்டுமென்பது அவர்கள் கருத்தாம். அது விஷயமாய் ஷெ. கனம்தங்கிய ஆகாகான் என்பவர் வட இந்திய மேல் இந்தியாவின் பாகங்களில் சஞ்சாரம் செய்து ஏராளமான திரவியம் சேகரித்துவருகின்றனர். முன் மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் ஏற்படுத்தியுள்ள வியவஸ்தையை அங்கீகரித்து அது சம்பந்தமான சக்ரவர்த்தியவர்களின் விண்ணப்பத்தில் கையொப்பம் வைக்கிறதாக வாக்களித்த மகம்மதியபுத்திமான்கள் தங்கள் சம்மதத்தை இப்பால் மறுத்து அதினின்று விலகிக்கொண்டார்கள்.

இதன் மத்தியில் அலகபாத்மாநகரின்கண் ஹைகோர்ட்டுவக்கிலாயிருக்கின்ற கனந்தங்கிய பண்டித மதன மோகன மாளவிய என்பார் ஒரு பிராமண சிரேஷ்டர். ஹிந்துக்களில் சில அறிஞர்களையும் பிரபுக்களையும் ஆலோசித்து காசி க்ஷேத்திரத்தில் ஹிந்துக்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் அது சம்பந்தமாக ஷெ யார் பலமானமுயற்சி செய்துகொண்டுவருகிறார்கள். இதுவிஷயத்தில் ஷெ. மாளவிய அவர்கள்பலவிடங்களிற்சென்று திரவியம்சேகரித்துக்கொண்டுவருகிறார்கள். இது சம்பந்தமாக மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியவர்களின் அனுமதி (Charter) யைப் பெறுவதற்கு ஒரு விண்ணப்பமும் தயாரிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ஆகவே மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களின் முன்னர், மகுடாபிஷேக உத்ஸவ சமயத்தில், இந்தியர்களின் அபிவிர்த்தியின் பொருட்டு சக்ரவர்த்தியவர்களின் அனுமதி(Charter)யை நோக்கியவைகளாக மூன்று விண்ணப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று, மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் அவர்களின் இந்தியாதேச முழுமைக்கும் பொதுவான சர்வகலாசாலையைப்பற்றிய விண்ணப்பமாம். இதில் நாஸ்திகம் ஒன்றுமட்டும் நீங்கலாக மற்றெம் மதசம்பந்த முள்ள வித்தியாசாலைகளையும் (affiliation) ஒன்றுபடுத்துவதற்கும், அதன் மூலமாய் அவைகளுக்குள் நேர்மையான ஒற்றுமைப்பாடு ஏற்படுவதற்கும் இடமுண்டு. நம் தேயத்தில் நடைபெறுகின்ற பலமதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பதும், அதையபிவிருத்தி செய்தல்வேண்டுமென்பதுமே, இவ்வேற்பாட்டின் முக்கிய நோக்கமாயிருக்கிறது. மேல் கீழ்நாட்டுச் சாஸ்திரப் பயிற்சிகள், பாஷா பயிற்சிகள், பொதுஜன சமூகத்திற்கு நலந்தரும் பயிற்சிகள், விரிவாய் ஏற்பட்டுள்ளன.

இரண்டாவது, கனந்தங்கிய ஆகாகான் அவர்களின் சர்வகலாசாலை முறையாம். இஸ்லாம் மதசம்பந்தமான வித்தியாசாலைகள் மட்டும் (affiliation) ஒன்றுபடுத்துவதற்கும், அதன் மூலமாய் இஸ்லாம் வித்தியாசாலைக்

ருள் மட்டும் நேர்மைப்பாடு ஏற்படுவதற்கும் இடமுண்டு. மற்ற மதஸ்தர்களும் மேற்படி கலாசாலையில் வந்து சேர்ந்து கல்விப்பயிற்சிபெறுதல் கூடும் என்று இவ்வியவஸ்தையைத் பொதுப்படையான அபிப்பிராயம் வெளிப்பட்டிருந்தாலும், உண்மையில் அவ்விதம் நிகழ்வதும் மதங்களுக்குள் துவேஷபுத்தியானது குறைவுபடுதலும் கூடுமென்று மதிக்க முடியாமலிருக்கிறது.

மூன்றுவது, கனந்தங்கிய பண்டிதர் மதனமோசன மாளவியர் அவர்களின் ஹிந்துமத சம்பந்தமான சர்வகலாசாலையாம். இதிலும் மகம்மதிய சர்வகலாசாலையைப் போலவே, இந்து மதம் பயில்விக்கப்படும் வித்தியாசாலைகள் மட்டும் (affil:ation) ஒன்றுபடுத்தப்படுவதற்கு வழியுண்டு. மகம்மதிய சர்வகலாசாலையைப் பற்றிய மேற்கூறப்பட்டுள்ள ஆக்ஷேபணைகள் இதற்கும் பொருந்தும்.

பிரகிருத ஸ்திதியில் மேற்படி மூன்று சர்வகலாசாலைகள் சம்பந்தமாக மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களின் அனுமதி (Charter)யை நோக்கியுள்ள விண்ணப்பங்கள் வெளிவந்திருப்பதில், மேற்படி மூன்று விண்ணப்பங்களையும் மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்கள் அங்கீகரித்து அவைகளை நடத்திவரும்படியாக அனுமதி கொடுப்பார்களாவென்ற ஒரு சங்கை நமது தேயத்திலுள்ள அறிஞர்களின் மனத்தில் உலாவிக்கொண்டிருக்கிறது. மாது ஸ்ரீ அன்னி பெசண்டு அம்மையாரும் பின்னும் சிலரும் மேற்படி மூன்று விண்ணப்பங்களைப்பற்றி அனுகூலப்பிராப்தி ஏற்படுவது அநேகமாய் முடியாதென்று கருதியுள்ளார்கள். இவைகளில் மகம்மதிய சர்வகலாசாலை சம்பந்தமாக முயற்சி அதிகத்தீவிரமாய் நடந்துவருகிறதும் தவிர, ராஜாங்கத்தில் மேலான உத்தியோகஸ்தர்களும் அதை யாதரிப்பதாகவும் பிரஸ்தாபம் நிகழ்கிறது. மற்றைய விரண்டு சர்வகலாசாலைகளைப்பற்றிய முயற்சிகள், தனித்தனியாய் நடைபெற்று வருவதில், ஒவ்வொன்றையும் தனிமையாய் நோக்கும் பக்ஷத்தில் அந்தந்த முயற்சி திரவிய வகையிலும், இராஜாங்க உத்தியோகஸ்தர்களின் ஆதரவைப்பெறும் வகையிலும், அதிக நலமுடையதாகத் தெரியவரவில்லை. மேலும் இவ்விரண்டு சர்வகலாசாலைகளைப்பற்றிய முயற்சிகள் ஹிந்துமதஸ்தர்களால் பெரும்பான்மையில் நடத்தப்பட்டுவருகின்றன. இவர்கள் தனித்தனி இருவகையால் இருமுயற்சிகள் செய்வதைத் தவிர்த்து, இரண்டையும் ஒருமைப்படுத்தி இரண்டும் ஒரு முயற்சியாக நடைபெறுமாகில், மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களின் அனுமதி (Charter) யைப் பெறுதல் சுலபமாகுவதுமன்றி, லக்ஷக்கணக்கான திரவியம் (60-லக்ஷத்துக்கு மேல் செல்லுமென்கிறார்கள், நன்றாய் நடத்தப்படவேண்டுமாயின் கோடி ரூபாய் வரையில் செல்லுமென்றும் சொல்லுகிறார்கள்.) வேண்டுவதான சர்வகலாசாலையும் நன்றாயும் பிரயோஜனகரமாயும் நடத்தப்பெறுவதற்கும் ஆஸ்ப

சம் உண்டு. இவ்விஷயத்தைக் கருதினவர்களாய் மாதா ஸ்ரீ அன்னிபெசண்டு அம்மையாரும் கனந்தங்கிய மதன மோகன மாளவியா என்பாரும் ஷை விஷயத்தைப்பற்றிக் கலந்துகொண்டு இரண்டு முயற்சிகளையும் ஒன்றுபடுத்த யோசித்திருக்கிறார்கள். ஒன்றுபடுத்தியிருக்கிறார்களென்றே சொல்லக்கூடியது. இவ்விஷயத்தைப் பூர்த்திபடுத்துகிறதற்காக அம்மையார் அவர்கள் இங்கிலாந்து தேசத்திற்குச் சென்றிருக்கிறார்கள். மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களிடம் நேரில் இவ்விஷயங்களைப் பிரஸ்தாபித்துக் கைவல்லியம் பெறும்படி செய்வார்கள் என்பதில் ஐயமேயில்லை. பண்டிதர் மதன மோகன மாளவியா அவர்களும் ஷை விஷயத்தில் பெருந்தன்மையுள்ளவராய்த் திரவியசகாயம் ஜனசகாயம் இவற்றைப் பெறுவதற்கு சாமர்த்தியமாய் முயற்சிப்பார்கள் என்பதற்கும் ஐயம் இல்லை. ஆனால், சில வீணர்கள் பிரஹ்மஞானசபையைப்பற்றி நியாயமில்லாத அக்கிரமமான துவேஷங்களை ஜனசமூகத்தில் உண்டுபண்ணிக்கொண்டுவருகின்றார்கள். அக்காரணம்பற்றி மேற்கூறிய பெருமுயற்சிக்குஒருகால் இடையூறு நேரிடும்போல் தோன்றுகிறது. ஆயினும் இம்முயற்சிகள் நம்தேயத்திற்கு நலந்தரும் என்பதைப்பற்றி நாம் சந்தேகமான கவலைகொள்ளவேண்டுவதில்லை. நம்தேசமானது மேன்மை பெறவும் அபிவிர்த்தியடையவும் நடத்தப்பெறும் எல்லாமுயற்சிகளும், இறைவன் அருளாலும் மஹருஷிகளின் அனுக்கிரகத்தாலும் சித்தியடையும்என்பது நிச்சயமானது. இவ்விஷயத்தில், தேசாபிமானம், மதாபிமானமுள்ள கனதனவான்கள் யாவரும் தம்மாலியன்றமட்டும் திரவியசகாயம் வாக்கு சகாயமிவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இம்முயற்சி முடிவுபெற்றால் ஹிந்துமத சாஸ்திரங்கள், யாதொரு குறைவுமின்றிச்சரியாய்க் கற்பிக்கப்படும் என்பதைத் தற்காலத்தில் காசிக்ஷேத்திரத்தில் நடைபெற்றுவரும் வித்தியாசாலையை நோக்குவதாலேயே நன்கு விளங்கும். கல்வி அபிவிர்த்தியின்பொருட்டுச் செய்யும் எல்லாவுதவியும் மிகவு மேலானபுண்ணியமன்றோ! எல்லாத்தானத்திலும் வித்தியாதானமே உயர் நலமுடையதென நம் ஆன்றோர் துணிபு. எத்தகைய செல்வத்தைப் படைத்தவரும் அச்செல்வத்தைக் கல்வி பரவச்செய்வதற்குச் சிறிதேனுமர்ப்பணம் செய்வார்களென்று பிரார்த்திக்கின்றோம்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

திருக்குறள்.

ஓம் தத் ஸத்.

ப. நாராயணன்.

## பூர்ணசந்திரோதய விளம்பரம்.

சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ இரண்டுதான்.
தனிப்பிரதி விலை அணா 4.

விளம்பர விகிதம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 | மாசம் | 4—0—0 | அரைபக்கம் | 1 | மாசம் | 2—8—0 |
| ,, | 3 | ,, | 10—0—0 | ,, | 3 | ,, | 7—0—0 |
| ,, | 6 | ,, | 20—0—0 | ,, | 6 | ,, | 12—0—0 |
| ,, | 1௵ | | 36—0—0 | ,, | 1௵ | | 18—0—0 |

ப. நாராயண அய்யர்,
பத்திராதிபரும் மானேஜரும்.

## புஸ்தகம், துண்டு பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமதத்தூஷணை பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| அவதாரங்களின் உண்மை | 0-8-0 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| அன்பு, அதன் உண்மை | 0-0-6 |
| சுகிர்தம்பயக்கும் வாழ்நாள்முறை | 0-0-3 |
| மடங்கள், மடாதிபதிகள் | 0-1-0 |
| நவராத்திரி அல்லது மஹிஷாஸுரமர்தநம் | 0-0-3 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மஞான சபை | 0-0-1 |
| ஷை யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| ஷை ஆங்கிலத்தில் | 0-0-3 |
| நாமிருக்கும் வீடு | 0-0-6 |
| அஷ்டமிபிரதக்ஷிணம் | 0-0-1 |
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 20 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,
பிரெஸிடெண்டு பிரஹ்மஞான சபை, மதுரை.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்ரீ காசி.**

பட்டு பீதாம்பர காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ளமாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாததைத்திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும்

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 முழம் 1க்கு ரூபா | 0 | 14 | 0 | 9 முழம் 1க்கு ரூபா | 2 | 0 | 0 |
| 6 ஷை | 1 | 4 | 0 | 10 ஷை | 2 | 8 | 0 |
| 7 ஷை | 1 | 8 | 0 | 12 ஷை | 3 | 8 | 0 |
| 8 ஷை | 1 | 12 | 0 | 15 ஷை | 4 | 8 | 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸானம், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6முழம் நீளம் 3 முழ அகலம். செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | .... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால்செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி. **Benares City.**